தர்க்கசூடாமணி.

இஃது

உடுப்பிட்டி

ரரசாமிமுதலியார் கதிரைவேற்பிள்ளை

அதநுலககாரநுயினல

பரிசோதிக்கப்பட்டுப்

பகிரங்கமாகின்றது.

JAFFNA

RIPLEY & STRONG, PRINTERS.

1862.

நூன்முகம்.

இந்நூல் சம்ஸ்கிருதத்தில் சிவகேசவமிசிரனால் இயற்றி
யது இது திராவிடத்தில் மொழிபெயர்க்கப்பட்டிரு
ந்து வழுவிலாத வாக்கியங்கள் மயங்கிச் சிக்கிக்கிடந்த
மையால் இதனை எவர்க்கும் பயன்படுநூலாக்கும்பொரு
ட்டுப் பரிசோதனைபண்ணித் தருகின்றேம். இந்நூலா
சிரியர் கௌதமரது தருக்கநெறியே நமது நெறியாகக்
கொண்டமையால் சம்ஸ்கிருதத்திலுள்ள நியாய சூ
த்திரவிருத்தியையே நமது ஆராய்ச்சியில் விசேட உப
கார கருவியாகக்கொண்டோம். தற்காலத்தில் ஐரோப்
பைய தார்க்கிகர் நியாய அங்கம் திரயாவயவமாகக் கூறி
னரேனும் பரதகண்டத்தார்க்கிகர் நியாய அங்கம் பஞ்
சாவயவமாகக்கூறினரேனும் இருதிறத்தோரும் மூன்றுறுப்பு
மைந்தாயும் விரித்துரைத்தநியாய இலக்கணம் ஒன்றே
யெனக்கொள்க.

பூலோகசிருட்டிகளுள் மனுஷசிருட்டிக்கே யுத்தி ச
த்தி சிறந்ததானதால் தர்க்கலட்சணமறிந்து எவ்விஷயத்
திலும் யுத்தித்து ஒழுகும் ஒழுக்கமே மனுஷர்க்குச் சி
றந்தவொழுக்கமெனக்கொள்க.

இன்னங்களிட்டுக் கீழே சிற்றெழுத்துக்களிற் பதிந்தி
ருக்கும் விசேட உரைகள் நமது கருத்தேயன்றிச் சம்ஸ்கி
ருத ஆசிரியரின் கருத்தன்றெனக்கொள்க.

நிர்க்கண்டபத்திரம்.

தர்க்கம்.

முதலாவது. பிரமாணம், பிரமேயம், சமசயம், பிரயோசனம், திட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தருக்கம், நிர்ணயம், வாதம், சற்பம், விதண்டை, எத்துவாபாசம், சலம், சாதி, நிக்கிரகத்தானங்களென்னு தத்துவஞானத்தால் உயர் சிறப்படைப.*

[illegible]. பிரமா
[illegible] அறிவி [illegible]
[illegible], அநுமானமா
[illegible] சேஷம
[illegible] காரியமாகப் பிறக்கும் புண
[illegible] பிரதி[illegible]களும், [illegible], அ
[illegible] [illegible]களுங்கால, அத
[illegible] அ[illegible] துகக[illegible] ஓ
[illegible] அபயாக்கபென்றும சொ
[illegible] கவுதமராதியர் சரு
[illegible] பிரமாணத்தி ப
திருநூ [illegible] வீட்டைநது
[illegible] எதிர்கொள்ளச். தர்க்கம வழு
[illegible], அ[illegible] பிரமாணங்களைத் துணைக்கொளவா
[illegible] ஆராயுங்கால, மெய்யிது பொய்யிதுவென்றறி
கான—கடவுளா அருளிய வேதமே யாது, கையர் இயற்
றிய நூல யாது என்றறிவான—ஒன்றேனும் பொய்மை
மொழி புக[illegible] [illegible] மற்றெப்பரிசினும் சாபர்த்
திய காரியமாயினும் [illegible]முடையதன்று,

உததேசம — இலககணம் — பரீட்சை — எவ
வளவும பிரமாணமுதலியவறறின உதசேச இ
லககண பரீடசை பணணபபடாது, அவவள
வும அவறறின உணமை அறிவுண்டாகாது அ
ஙஙனம இாதநூலது வழககு உதசேசமும, இல
ககணமும, பரீடசையும் என மூன்றுவகைத்து.

உதசேசமாவது பெயா மாததிரையாற் பொ
ருளைச சொலவது

இலககணமாவது சிறபபியல்பு. எஙஙனமெ
னின ஆவிறகுத தாடி முதலிய உடைமை

இலககியததிறகு, இலககணமபொருநதுமோ
பொருநதாதோ எனறாராயதல பரீட்சை

ஆதலின இவ்விலககணபரீட்சைகள பிரமா
ணாதிகளுடைய உணமையறிவினபொருடடு ஒ
ருதலையாய வேணடின அவறறுளளும முத
றகண உததேசிதத பிரமாணததிறகு இலககண
ம முறையே கூறபபடும.

---

௧. பிரமாணம்.

பிரமைககுக கரணம் பிரமாணம இதிற்
பிரமாணம இலககியம, பிரமாகரணததனமை

படுடசிருட்டியாதல வேணடும எனறறிவான—இவவ
ககை புரிசலறம இவவகைப்ரிதல டறம எனறறிவா
ன. ஆசலால தாககவிசதியை வீடடைதறகு வழியா
கும என ஒருபடிசதாய எவரும கொளளறபாறறு.

மேலைககாடடிபதில கெளதமா கூறிய மதசாரம அபத
தமாயினும அவா கூறிய பிரமாணம வழுவுறறெனக சா
ளைக

இலக்கணம். அற்றுயிற் பிரமாணம் பிரமைக்குக் கரணமாயின் அதற்குப் பயன் கூறல்வேண்டும்; கரணத்திற்குப் பயனுடைமை நியமமாதலின். அஃதொக்கும்; அதற்குப் பிரமையே பயன். பயனாவது சாதித்தல். துணித்தற் கருவியாகிய நவியத்திற்குத் துணித்தலேபயன்.

பிரமை.—எதனது கரணம் பிரமாணமென்று கூறப்பட்டது அப்பிரமையாவது யாது? மெய்மை அநுபவம் பிரமை; மெய்மையென்றது பொய்மையாகிய ஐயத்திரிவு தருக்க உணர்வுகட்கு விலக்கு. அநுபவம் என்றது நினைவிற்கு விலக்கு. அது நினைவிற்கு அயலாகிய உணர்வு.

கரணம்.—கரணமாவது யாது? உயர்ந்தகாரணம் கரணம்.

காரணம்.—அக்காரணமாவ தியாதெனிற் கூறுதும். நியதமாய்ப் பிறிதொன்றற் காதலின்றிக் காரியத்திற்கு முன்னிற்றல் உடையது யாது, அது காரணம்; ஆடைக்கு நூல் நாடா முதலியனபோல்வ. ஆடை தோன்றுழித் தன்னியல்பின் வந்த கழுதை முதலியவற்றிற்கு முன்னிற்றல் உண்டன்றே. ஆயினும் அது நியமமன்று. நூலுருவிற்கு நியதமாய் முன்னிற்றல் உண்டன்றே எனின், அது பிறிதொன்றற்காதல்; ஆடையுருத்தோற்றத்தமைதலின், ஆடையைக் குறித்துங் காரணமெனிற் கற்பனை பெருகும். ஆதலிற் பிறிதொன்றற் காகாமையாய்

முன்னிற்பதன்றன்மை காரணத்தன்மை. நிய
தியாற் பிறிதொன்றற்காகாது அதின் பின்னிற்
பதன் றன்மை காரியத்தன்மை.

ஒருவன் காரியத்தாலே தேடப்பட்ட அந்
நவயவியதிரேகி காரணமென்றான், அது பொ
ருந்தாது; நித்தியவியாபகமாவான் முதலியவற்
றிற்குக் காலத்தாலும் இடத்தாலும் வியதிரேக
மின்மையிற் காரணம்அன்மை வரவேண்டுத
லின்.

சமவாயிகாரணம்.—அக்காரணமும், சம
வாயி, அசமவாயி, நிமித்தம் என்றுங் கூறுபா
ட்டால் மூவகைப்படும். அவற்றுள் எதன்க
ட்சமவேதித்துக் காரியந் தோன்றும், அது ச
மவாயிகாரணம், நூல்கள் ஆடைக்குச் சமவா
யி காரணமாதல் போல்வ. நூலின்கண்ணே
ஆடை சமவேதித்துத் தோன்றும், நாடா முத
லியவற்றின் இல்லை.

அற்றாயின் ஆடைக்கு நூலோடும் நாடாமு
தலியவற்றோடுஞ் சம்பந்தமுளதாக, நூலின்க
ண்ணே ஆடை சமவேதித்துத்தோன்றும்—நாடா
முதலியவற்றின்கண் இல்லையென்பது எங்ங
னம்? அஃதொக்கும், அச்சம்பந்தம், சையோ
கமும் சமவாயமுமென இருவகைப்படும். அ
வற்றுள் நீக்கம் இன்றிருப்பவற்றின் சம்பந்தம்,
சமவாயம், ஏனையவற்றது சையோகமே. நீக்
கமின்றிருப்பன யாவை? அவற்றுள் ஒன்று ம
ற்றொன்றைப்பற்றியே நிற்கும், அவை நீக்கமி
ன்றிருப்பன, எங்ஙனம்? அவயவாவயவிகள்,

குணகுணிகளு, வினையவா யுதாகள, சாதிவடிவு
கள, விசேடந் பற்ப் பொருள்கள என்பனவே.
அவையவிமுதலியன முறையே கெடாதனவா
ய் அவையவமுதலியவற்றைப் பற்றியே நிற்கு
ம, கெடுமவற்றாயிற பற்றுமையே நிற்கும். நூ
லது கெட்டுடன் ஆடைபோலவும் பற்றுக்கோட்
டது கேட்டிற் புளமபோலவும். கெடுத்தற்றன்
மையாவது யெகப்பற் காரணகூட்டஙகூடுதல்.
நூல்ஆடைகளு ம அவயவஅவயவிகளாதலி
ன, அவற்றது சமபந்தம சமவாயம்; நீக்கமின்
றியிருத்தலின. நாடாஆடைகட்காயிற் சமவா
யமின்று நீக்கமின்றிருத்தலின்மையின். நாடா
ஆடையைப்பற்றி நிற்றலும் இன்று. ஆதலின்
அவற்றிறகுச சையோகமே. ஆதலின் இங்ங
னம ஆடைநூலிற் சமவேதம். எதன்கட் சம
வேதித்துக காரியந்தோன்றும, அது சமவாயி
காரணம, ஆதலின்நூல்களே ஆடைக்குச் சம
வாயிகாரணம; நாடா முதலியன அல்ல. ஆ
டையுந் தற்புணருருவமுதலியவற்றிற்குச் சம
வாயிகாரணம. இஙஙனம் மட்பிண்டமுங் கு
டத்திற்குச சமவாயிகாரணம். குடமுந் தற்பு
ணருருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம்.

அற்றாயின் எப்பொழுது குடமுதலியன தோ
ன்றும் அப்பொழுதே தற்புணருருவ முதலிய
னவுந் தோன்றும—ஆதலின் ஒருகாலத்திற்றோ
ன்றின—ஆதலிற் குணகுணிகள் இடவலக்கோ
டுபோலக் காரியக் காரணத்தன்மையேயில்லை,
முற்பிற்பாடு இன்மையின்—ஆதலிற் குடந்தற்
புணருருவமுதலியவற்றிற்குச் சமவாயி காரண

மன்று.—சமவாயிகாரணங் காரணவிசேடமா தலின் எனிற் கூறுதும்.

குணகுணிகட்கு ஒரு காலத் தோற்றமின்று. எங்ஙனமெனில் பொருள் குணமிலியாயே முற்றோன்றும். பின அதிற் சமவேதித்துக் குணங்கடோன்றும். ஒரு காலத்தோற்றமாயிற் குணகுணிகட்கு, ஒரு காரணக்கூட்டத்தனவாதலில் வேறுபாடில்லாதல் வேண்டும். காரியவேறுபாடு காரணவேறுபாட்டின் நியதமாதலின். குணமிலியேயாய குடம் குணங்கட்கு முன்னிற்பதாதலின், பொருள் குணங்கட்குச் சமவாயிகாரணமாம். அப்பொழுது காரணவேறுபாடுமுண்டு. குடங் குடத்தைக் குறித்துக் காரணமன்றே. ஒன்றற்கே முற்பிற்பாடின்மையின். தானே தன்னைக் குறித்து முன் நிற்பதும் பின் நிற்பதுமில்லை, தன குணங்களைக் குறித்து முன் நிற்றலின் பொருள் குணங்கட்குச் சமவாயிகாரணமாம

அற்றாயின் இங்ஙனமாயின் பொருள் முற்கணத்திற் கட்புலமன்மையாதல் வேண்டும். அருவப்பொருண்மையாதலில்; காற்றுப்போல். எப்பொருள் பரிதா உற்பூதவுருவமுடையது, அப்பொருளே கட்புலப்படுவது, பொருண்மையுமாதல் வேண்டும்; குணத்திற்கு இடனாதற்றன்மையின்மையின். குணத்திற்கு இடனாதல் பொருளென்பது இலக்கணம். அஃதொக்கும், மிகவு நுண்ணிய குடத்திற் குடம் முதற் கணத்திற் கட்புலனாற் கவரப்படாதாயின் அப்பொழுது நமக்கு இடையூறியாது? ஆதலின் மு

ன்னாக்குணமிலியாயே குடந் தோன்றுமென்னும் இது துணிவு. இரண்டு முதலிய கணங்களிற் கட்புலனாற் கவரப்படும். முற்கணத்திற் பொருளன்மையாதலில்லைச் சமவாயிகாரணம் பொருளென்னும் இலக்கணப்பொருத்தத்தால் தகுதியால் குணத்திற்கு முமாதலின.*

[illegible]

[illegible] அதுபோல் உளதாய் பொருளாது. உளதென்று சொல்லப்படுவது யாதோ யாது, அது அது யாதேனும்போலன்மையினாற் காணவேண்டும். தன்மையினறியும் பொருந்[illegible] நப்படு ஆதாரமாகவாகுதியாம். எங்ஙனமெனின் [illegible] மூளையெனவே, அத் திரவியம் பெரியதோ சிறியதேனும், ஆனாலும், அதுசாதுவேனும் மே[illegible]வேனும் [illegible], [illegible] கருதவேண்டுமே. அப்பொருள் [illegible]க்குச் [illegible]வாயின், உருவத்தன[illegible], [illegible]றாயின் அருவத்தன்மையுடையாயும் இருக்கவேண்டுமே. இவைபோல்வனற்றால் பொருள் உளதென்றறியுங்கால் அதில் இன்ன இன்ன பரிசாய் இருக்கின்றதென்றறியும் அறிவு விடையமே [illegible] இதனையே குணம். ஆதலால் குணமென்பது, தானே திரவியமாகாது, தான திரவியத்தி

அசமவாயி காரணம்.—சமவாயிகாரணத்
தனுகியிருப்பதும், துணிதற் காரணத்தன்மையு
டையதுமாயிருப்பது அசமவாயிகாரணமென்று
கூறப்படும். ஆடைக்கு நூலியைபு அசமவாயி
காரணம்போல்வ. நூலியைபாகிய குணத்திற்கு,
ஆடை, சமவாயிகாரணமுங் குணியுமாகிய நூல்
களிலே சமவேதிப்பிக்குதலின் சமவாயிகார
ணத்தணித்தாயிருத்தலின் பிறிதொன்றற்கு ஆகா
மையும் நியதியுமாகிய முன்னிற்றற்றன்மையால்
ஆடையைக் குறித்துங் காரணமாதலின். இங்ங
னம் நூலுருவம் ஆடையை அடைந்த உருவிற்கு
அசமவாயி காரணம். அற்றாயின் ஆடையுருவி

னின்று பிற்றொன்றுகாரணமாய்த் திரவியத்தைக் கிரகிக்கின்
றனராய் உள்ளதே ப்ரதாயிற்றால் பகுக்கப்பட்டும் பிறப
கூடபயோகமாகப்பெற்றும்படும் பெயர் பிறிதுகொடுக்கப
பட்டுக் கிடக்கும் பரோக்ஷ டடியெனறுகொளக

குணமெனப்படும் பரோக்ஷ டடியாகக்கொண்டு, பரந்
தின கண்ணே கிடந்த குணமற்றதத் திரவியத்தின்க
ண்ணே சமவாயம் சேர்வதில்லை—ஆதலால் திரவியந்
தோன்றுங்கால் குணந் தோன்றியதில்லையென்று சொ
லின ஒருவாறு பொருந்தும். எங்ஙனமெனின் குடம்
எனபது தோன்றியபின் அதின உருவம் குடத்தினின்று
ம எழுந்து சடபொறியின் பிரபூதக் கதிர்களால் கிரகிக்க
ப்படுவதாதலின அக்கதிரச் சொருபமாகிய உருவமே
குடத்தின்குணமாகக் காணகின்றவனுடைய உள்ளத்தி
ற்கொளக் கிடப்பதால், அக்குணம் குடத்தின் சமவேத
மெனறும் அதற்குக் குடஞ்சமவாயமெனறும் குடந்தோ
ன்றியபோது குணந்தோன்றவில்லையெனறும் சொலவக
கையும். ஆயினும் இவ்வாசிரியன இக்கருத்துப் பற்றிக்
கூறினரென்று நாம் சொல்ல வேல்லோம்.

ற்கு ஆடை சமவாயிகாரணம். ஆதலில், தன்னையடைந்தேயிருக்கின்ற ஒரு தருமத்திற்கு ஆடை உருவைக் குறித்து அசமவாயிகாரணத் தன்மை கூறத்தகும் ; சமவாயிகாரணத்தணித்தாயிருத்தலின.

நிமித்தகாரணம.—யாதொன்று சமவாயிகாரணமும், அசமவாயிகாரணமும் அன்றாய்மற்றுங் காரணமாம் அது நிமித்தகாரணமென்று கூறப்படும். நாடா முதலிய ஆடைக்கு நிமித்தகாரணம்.

இக்காரணங்கள் மூன்றும் உள்பொருளுக்கே ; இல்பொருட்காயின் நிமித்தகாரணம்மாத்திரம். அதற்கு ஓரிடத்துஞ் சமவாயமின்மையின் ; சமவாயம் உள்பொருள் இரண்டின் தருமமாதலின. இக்காரணங்கள் மூன்றினுள் யாதாயினும் மேவலாற்றானும் உயருமாயின் அதுவே கரணம். ஆதலின பிரமைக்குக் கரணம் பிரமாணமென்னும் இவ்விலக்கணந் துணியப்படும்.

உணரப்படாத பொருளினது உணர்வு பிரமாணமென்பது பிரமாணஇலக்கணமெனின் அஃதன்று. ஒரு குடத்தின்கண்ணே குடமிது குணமிது என்றுணரப்பட்டதை உணருந்தாரைகொள் உணர்வுகட்கு அப்பிரமாணியம் வரவேண்டுதலின். வேறுவேறாகிய கண் விசேடத்தோடு கூடிய பொருட்கவர்ச்சியான் உணரப்படாத பொருளினது உணர்தற்றன்மை உண்டென்பதன்று ; காட்சியான் உன்னிய காலவேறுபாட்டினது தெரியாமையின். வேறுபாடு தெரியின் கிரியை முதற் சையோகமீறாய நான்கி

தரும் ஒருமையபிமானமின்றாதல், வேண்டும். பிரமாதாருப் பிரமேயம முதலிய பல காரணங்கள் பிரமைக்குள. இவையெல்லாங் காரணமோ அல்லதல்லவோ கூறுதும். பிரமாதாவும் பிரமேயமுமிருப்பினும் பிரமை பிறவாமையினானும் இந்திரியசையோகாதியுண்டாயின, விரைவினற் பிரமை பிறத்தலினானும் இந்திரிய சையோகாதிபோலிய காரணம, பிரமாதா முதலியனவல்ல. சாதாரணத்தன்மை விசேடமின்றாயினும் இவ்வியாசியாயினை புகற்குப் பிரமாதா முதலியவற்றினின்றும் அதிசயமாதலின் உயர்ந்த காரணங் கரணமென்று கூறப்பட்டது. இந்திரிய சையோகாதிபோலிய பிரமைக்குக் கரணமாதலிற் பிரமாணம பிரமாதா முதலியன அல்ல. அப பிரமாணங்கள் நான்கும் அங்ஙனம்.

இனிக காட்சி அநுமான உபமான சப்தங்கள் பிரமாணங்கள்.

காட்சி.

சாட்சாற்காரிப்பிரமை, கரணம்.

காட்சியாவதியாது? சாட்சாற்காரிப்பிரமைக்குக் கரணம். காட்சியாதிஇந்திரியத்தாற்றோன்றுமது, சாட்சாற்காரிப்பிரமை. அஃதும் சவிகற்ப நிருவிகற்பக் கூறுபாட்டால் இருவகைப்படும். அதற்குக் கரணம் மூவகை; ஓரிடத்திந்திரியம், ஓரிடத்துப் பொருள்இந்திரியசங்கட்டம், ஓரிடதது ஞானம்.

எவ்விடத்திந்திரியங் கரணம்? எப்போது நி ருவிகற்ப உருவப் பிரமை பலமாம், அப்போ து இந்திரியங் கரணம். அவ்வாறே உயிர் மநத் தோடு கூடும்; மநம் இந்திரியத்தோடு; இந்திரி யம் பொருளோடு; இந்திரியங்கட்கு அடைந் ததை விளக்குந் தன்மை நியமமாதலின். ஆதலிற் பொருளோடு கூடிய இந்திரியத்தாற் பெயர் சா தி முதல் இயைபில்லாத பொருள்மாத்திரமகப் படுக்கும் நிருவிகற்ப ஞாநந் தோன்றும். அவ் ஞாநத்திற்கு இந்திரியங் கரணம்; துணித்தற்கு நவியம் போல; பொருளிந்திரியக் கூட்டம் அ வாந்தரவியாபாரம். நவியத்திற்குமரத்தோடு கூ ட்டம் போல; நிருவிகற்பஞாநம் பலம்; ந வியத்திற்குத் துணித்தல் போல.

எவ்விடத்துப்பொருளிந்திரியக்கூட்டங் க ரணம்? எப்போது, கூறப்பட்ட நிருவிகற்பத் தின் பின்னர் பெயர் சாதி முதலியையுள்ள, சா த்தனிவன், பார்ப்பானிவன், கரியனிவன் என் னும் விசேட விசேடியத் தன்மை அகப்படுக்கு ஞ் சவிகற்பஞாநந் தோன்றும், அப்போது பொ ருளிந்திரியக்கூட்டங் கரணம்; நிருவிகற்பம், அவாந்தர வியாபாரம்; சவிகற்பஞாநம் பலம்.

எவ்விடத்து ஞாநங் கரணம்? எப்போது, கூறப்பட்ட சவிகற்பத்தின் பின்னர் வெறுப்பு விருமற்புத்திகடோன்றும், அப்போது நிருவிக ற்பஞாநங் கரணம்; சவிகற்பம் அவாந்தரவியா பாரம்; வெறுப்பு முதலிய புத்திகள் பலம்.

சவிகற்பமுதலியவற்றிற்கும் இந்திரியமே க ரணமென்பாருமுளர். நடுவுதோன்றியன எவ்

வளவோ அவையனைத்தும் அவாந்தரவியாபாரம்

அறுவகைக்கூட்டம்.—பொருளிந்திரியங்களுடைய சாட்சாற்காரிப்பிரமைக்கு ஏதுவாகிய கூட்டம் யாது; அஃது அறுவகையே. அவை சையோகம், சையுத்த சமவாயம், சையுத்த சமவேத சமவாயம், சமவாயம், சமவேத சமவாயம், விசேடவிசேடியத்தன்மையென்பனவே.

எப்போது கண்ணாற் குடவிடைய ஞானந்தோன்றும், அப்போது கண்ணிந்திரியம், குடம் பொருள், அவற்றது கூட்டஞ் சையோகமே; நீக்கமின்றிருத்தலின்மையின்; இங்ஙனம் மநம் என்னும் அகவிந்திரியத்தால் ஆன்மவிடைய ஞானம் நானென்று தோன்றும். அப்போது மநம் இந்திரியம்; ஆன்மா பொருள்; அவற்றது கூட்டஞ் சையோகமே.

எப்போது சையுத்த சமவாயக் கூட்டம்? எப்போது கண்முதலியவற்றாற் குடமடையுருவம் முதலியவை, குடத்தின்கண் நீலஉருவமுண்டென்று கவரப்படும், அப்போது கண்ணிந்திரியம்; குடமடையுருவமுதலியவை பொருள்; அவற்றினது கூட்டஞ் சையுத்தசமவாயமே. எங்ஙனம்? கண்ணோடு சையுத்தமான குடத்தில், உருவிற்குச் சமவாயமாதலின். இங்ஙனம் மநத்தால் ஆன்ம சமவேதமாகிய இன்பமுதலியவை கவரப்படும், அப்போதும் இக்கூட்டமே. குடமடைபரிமாணமுதலியவற்றின் கவர்ச்சியின் நான்கு வகைக்கூட்டமும் இக்காரணமென்று வேண்டப்படும். சையுத்தசமவா

பம உண்டாயினும் அஃதில்லாதபோது, சேய்மைக்கட்பரிமாணங் கவரப்படாமையின். நான்குவகைக் கூட்டம் எங்ஙனம்? இந்திரிய அவையவங்களோடு பொருளவயவங்கட்கு இந்திரிய அவையவியோடு பொருள் அவையவங்கட்கென்று.

எப்போது சையுத்த சமவேத சமவாயக் கூட்டம்? எப்போது கண்முதலியவற்றாற் குடவுருவிற சமவேதமான உருவத்தன்மை முதலிய சாதி கவரப்படும், அப்போது கண் இந்திரியம்; உருவத்தன்மை முதலிய சாதிபொருள். அவற்றது கூட்டஞ் சையுத்த சமவேத சமவாயமே. எங்ஙன்? கண்ணொடு சையுத்தமான குடத்திலுருவஞ்சமவேதம், அதன் கண்ணுருவத்தன்மைக்குச சமவாயமாதலின்.

எப்போது சமவாயக் கூட்டம்? எப்போது செவிப்புலனால் இருககாரமென்றோசை கவரப்படும் அப்போது செவி இந்திரியம், ஓசைபொருள், அவற்றினது கூட்டஞ் சமவாயமே. செவிக்கு வானவடிவமுண்மையின் ஓசைக்கு வானகுணத்தன்மையு ண்மையின; குணகுணிகட்குச சமவாயமாதலின்.

எப்போது சமவேத சமவாயக் கூட்டம்? எப்போது செவியிற் சமவேதமான ஓசையில் ஓசைத்தன்மைமுதலிய சாதி கவரப்படும், அப்போது செவி இந்திரியம், ஓசைத்தன்மை முதலிய சாதி பொருள்; அவற்றினது கூட்டஞ் சமவேத சமவாயம். செவியிற் சமவேதமான ஓசையில் ஓசைத்தன்மைக்குச் சமவாயமாதலின.

எப்போது விசேடவிசேடியத்தன்மைப்பொ
ருள் இந்திரியக் கூட்டம்? எப்போது கண்
ணோடு சையுத்தமான நிலத்திற் குடமில்லையென்
று குடமுதலியவற்றின்மை கவரப்படுமோ, அப்
போது கண்ணோடு சையுத்தமான நிலத்திற்குக்
குடமுதலியவற்றின்மை விசேடியம். குடமி
ல்லது நிலமெனனுமிடத்துக் குடமுதலியவற்
றின்மை விசேடம். எப்போது மனத்தோடு
சையுத்தமான ஆன்மாவின் கண் இன்ப
மில்லென்று கவரப்படும் அப்போது மன
தோடு சையுத்தமான ஆன்மாவுக்கு இன்பமு
தலியவற்றின்மை விசேடியம். இன்பமில்லை
யென்னுமிடத்தின்பமின்மை விசேடம். எ
ப்போது செவியிற் சமவேதமான சகாரத்திற்
ககாரத்தன்மையில்லென்று கவரப்படுமோ. அப்
போது செவியிற் சமவேதமான சகாரத்திற்குக்
ககாரத்தன்மை விசேடியம. சகாரத்தன்மையில்
லது ககாரமென்புளிச் சகாரத்தன்மையின்மை
விசேடமாதலில் இங்ஙனஞ் சுருக்கத்தாற் கூறு
தும். ஐவகைச் சம்பந்தத்தின் சம்பந்தியினது
விசேட விசேடியத்தன்மை இவ்வகையான
பொருளிந்திரியக் கூட்டத்தால் இன்மை கவர
ப்படுமே. இங்ஙனஞ் சமவாயமுங் கண்ணோ
டு சையுத்தமான நூலிற்கு விசேட விசேடியமா
ன ஆடைச் சமவாயம். இந்நூல்களில் ஆடை
ச் சமவாயமென்று கவரப்படும். ஆதலின் இ
ங்ஙனம் அறுவகைக் கூட்டங் கூறப்பட்டது.

அநுமாநம்.

இலிங்க பராமரிசம் அநுமாநம். எதினால் அநுமிக்கப்படும் அஃது அநுமாநம். இலிங்கபராமரிசத்தானே பொருள் அநுமிக்கப்படும். ஆதலின் இலிங்கபராமரிசம்அநுமாநம். அது புகை முதலிய ஞாநம்; அநுமிதியைக் குறித்துக்கரணமாதலின். தீ முதலிய ஞாநம அநுமிதி; அதன் கரணம் புகை முதலிய ஞாநம்.

இலிங்கம் யாது? அதனது பராமரிசம்யாது? கூறுதும். வியாத்திவலத்தாற் பொருளையுணர்த்துவது இலிங்கம். எங்ஙனம்? புகை தீக்கிலிங்கம். அங்ஙனமன்றே யாண்டுப்புகை ஆண்டுத்தீயென்னும் உடனிகழ்ச்சி நியமம் வியாத்தி. அது கவரப்படுங்காலே புகை தீயை உணர்த்தும். ஆதலின் வியாத்திவலத்தாற்றீயநுமாபகம். ஆதலிற் புகை தீக்கிலிங்கம். அதனது மூன்றாம் ஞாநம் பராமரிசம். அங்ஙனமன்றே முன்னே அட்டின்முதலியவற்றின் மறித்து மறித்தும் புகைகண்டு தீக்காணாநின்றான், அம்மறித்துக் காண்டலாற் புகை தீக்களது தன்னியல்பான சம்பந்தம் துணியாநின்றான், யாண்டுப் புகை ஆண்டுத்தீயென்று.

யாண்டு மித்திரைமகன்மை ஆண்டுக்கருமையென்பதொக்கும். ஆயினும், மித்திரைமகன்மை கருமைகட்குத் தன்னியற்கைச் சம்பந்தமின்று. மற்றென்னெனின ஔபாதிகமே; அடகு முதலிய உணவுப் பரிணமமான உபாதியுண்மையின்; அங்ஙனமன்றே கருமையின் மித்திரைமகன்மை பிரயோசகமன்று. மற்றென்னெ

னின் அடக்கு முதலிய உணவுப் பரிணதி வேறு பாடே பிரயோசகம். பிரயோசகமும் உபாதி யென்று கூறப்படும் புகைதீக்களது சம்பந் தத்தில் ஒருபாதியுமின்று; தகுதியல்லது சங்கித தற்பொருட்டருமையாதலின தகுதியது காண ப்படாமையின. யாணடுபாதியுணடு ஆண்டுக் காணப்படும். எங்ஙனம்? தீக்குப புகையொடு சமபந்தத்தில நர விறகின கூட்டம, கொலை மைக்கு அதன்மசாதநதத்தோடு கூடிய சமபநதத தில் இழிவுடைமை. உபாதி மித்திரைமகன் மைக்குக கருமை சமபந்தத்தில அடக்கு முதலி லிய உணவுப் பரிணதி வேறுபாடு. ஈணடு ப்புகைக்குத தீயுடனிகழ்ச்சியில ஒருபாதியுமி னறு.

உணடாயின் அப்போது நிலம்போலக் காண ப்படும். ஆதலிற காட்சியினமையினிலலையெ னனுந் தருக்கத்துணையுடைய உணாவின்மை யோடு கூடிய காட்சியானே உபாதியின்மை துணியப்படும். அஙஙனமனறே உபாதியின மையிற்றோன்றிய வாசனையோடு கூடிய மறித துக்காண்டலிற்றோனறிய வாசனையோடு கூடி ய உடனிகழ்ச்சி கவருங காட்சியானேபுகைதீ க்களது வியாததி துணியப்படும். ஆதலின பு கை தீக்களுக்குத தன்னியற்கைச்சம்பந்தம. ஔபாதிகமன்று. தன்னியற்கைச சம்பந்தம, வியாத்தியென்று கூறப்படும்.

ஆதலின் இந் நியாயத்தாற் புகை தீக்களது வி யாததி கவரப்படுகையின் அட்டிலிற் புகை ஞா நம் யாது, அதுமுதலது, மலை முதலிய பக்கத திற் புகை ஞாநம் யாது, அது இரண்டாவகா

ிற்பாடு முன் கவரப்பட்டதாகிய புகை நீக்க
ளது வியாத்தியை நினைத் தம்மலையின்கண்ணே
பின்னர்ப் புகையைப் பராமரிசிக்கின்றான் இம்
மலையிற்றீயால் வியாத்தமான புகையுண்டென்
று. இப்புகைஞாநமூன்றாவது. இஃதொரு தலை
யாய் வேண்டப்பட்டது. வேறாயின் யாண்டுப்
புகை ஆண்டுத் தீயுண்டாக ஈண்டுத்தீயிருத்தலெ
ங்ஙனம்? ஆதலின் ஈண்டுப் புகையுண்டென்
னும் ஞாநம் வேண்டப்படும்.

இதுவே இலிங்க பராமரிசம். அநுமிதியை
க் குறித்துக் கரணமாதலின் அநுமாநம். அத
னால் இம்மலையிற்றீயுண்டென்னும் அநுமிதிஞா
நந் தோன்றும்.

ஆகையின் முன்னிரட்டலிற் புகை ஞாநம் யா
ததுதீயநுமாபகம் எங்ஙனம்? அன்று; அஃது
ஒக்கும்; வியாத்தி கவரப்படாமையின், வியாத்
தி கவரப்படுகையின் அநுமிதி தோன்றலின்.
ஆயின் வியாத்தி துணிந்தபின் பட்டிவின்கண்
ணே தீயநுமிக்கப்படும். அநுபலத்திப்பொரு
ளிலும் துணிந்த பொருளிலும் நியாயம் வழங்
காது. மற்றென்னெனிில்ஐயப்படுபொருளில்.
ஆயின் மலையடைதன் மாத்திரமாகிய மகற்குப்
புகைஞாநந் தீயை அநுமிக்கப்பண்ணுதலென்?
இவ்விடத்தையமுண்டென்றே சாதித்தல் வாதி
த்தலாகிய பிரமாணமின்மையால், ஐயம் அநுமா
நத்தாலடைதலின். அஃதொக்கும்; கவரப்படா
த வியாத்தியான் போலக் கவர்ந்து மறந்து கவர்
வியாத்தியுடைய மகற்கும் அநுமாநமீ பிறவா
மையால், வியாத்தி நினைவும் அநுமிதியேதுவா
தலின். புகை காண்டலா லெழுந்த வாசனையு

டையனாய் வியாத்தியை நினைப்பான், எதேது
புகை யதுவதுதீயது, எங்ஙனம், அட்டிலென்
று. ஆதலிற் புகைக் காட்சி தோன்றலில் வியாத்
திநினைவு தோன்றுகையின் இதுவும் புகையு
டைத்தென்னும் புகை ஞானம் யாது, அது மூ
ன்றாவது. அதுவே தீயையநுமிக்கப்பண்ணும்,
மற்றையவல்ல. அதுவே இலிங்கபராமரிசம். ஆ
தலில் இலிங்க பராமரிசம் அநுமானமென்னுமி
து துணியப்படும்.

தற்பொருட்டநுமானம.

அவ் வநுமானமும் தற்பொருட்டும் பிறன்
பொருட்டுமென இருவகைபபடும். தற்பொரு
ட்டுத் தன்னுணர்வினது. அங்ஙனமன்றே,
தானே அட்டின் முதலியவற்றின் விசிட்டமா
கிய காட்சியாற் புகைதீக்களது வியாத்தியைக்
கவர்ந்து, மலையருகடைந்து அதன்கட்டீயினை
ஐயமுடையனாய் மலையின் நிகழ்வதாய் இடை
விடாத மூலத்ததாய் விண்ணுரிஞ்சும் புகை ஒழு
ங்கைக் கண்டு புகைகாண்டலாலெழுந்த வாச
னையுடையனாய், யாண்டுப்புகை ஆண்டுத்தீயெ
ன்று வியாத்தியை நினையாநின்றான், ஈண்டும்பு
கையுண்டென்றுணராநின்றான், ஆதலின் இம்
மலையிற்றீயுண்டென்று தானே யுணராநின்றா
ன். அதுவே தற்பொருட்டநுமானம்.

பிறன்பொருட்டநுமானம்.

தான் புகையாற்றீயையநுமித்தும் பரனைக்கு
றித்துப் போதிக்கும்பொருட்டுப் பஞ்சாவயவ
அநுமானவாக்கியம் யாது கூறுகின்றான், அது

பிறன்பொருட்டநுமாநம். அஃதெங்ஙனம்? மலைதீயுடைத்து; புகையுண்மையான்; யாதுயாது புகையுடைத்ததுவதுதீயுடைத்து எங்ஙனம், அட்டில்; இதுவும் அங்ஙனம் ஆதலில் அங்ஙனம்; என்பதே. இவ்வாக்கியத்தானே பிரதிபாதிக்கப்பட்ட பஞ்சரூபத்தோடு கூடிய அவ்விலிங்கத்தாற் பரனுந் தீயையுணரா நின்றான். ஆதலின் இது பரார்பொருட்டநுமாநம்.

அந்நுவயவியதிரேகி.

இதின், மலைக்குத் தீயுண்மை சாத்தியம். புகையுண்மை ஏது. அதுவும் அந்நுவயவியதிரேகி; அந்நுவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தியுடைமையின்.

அங்ஙனம், யாண்டுப்புகை, ஆண்டுத்தீ, எங்ஙனம், அட்டில் என்பது அந்நுவயவியாத்தி; அட்டிலிற் புகைதீக்களதந்நுவயஉண்மையது காட்சியின்.

இங்ஙனம் யாண்டுத்தீயில்லை ஆண்டுப் புகையுமில்லை, எங்ஙனம், மடுவில்; என்பது வியதிரேக வியாத்தி. மடுவிற்புகைதீக்களதுவியதிரேகஉண்மையது காட்சியால் வியதிரேக வியாத்திக் கிது முறை.

அந்நுவயவியாத்தியில் யாது வியாப்பியம், அதனின்மை ஈண்டுவியாபகம், யாதுவியாபகம் அதனின்மை ஈண்டுவியாப்பியமென்று அங்ஙனங் கூறப்பட்டது. உண்மை விய பியமும் ஏனைவியாபகமும் இன்மைக்கு மாறுய்வரும்.

ஆதலில் இங்ஙனம் புகையுண்மையேதுவில் அந்நுவயத்தானும் வியதிரேகத்தானும் வியாத்தியுண்டு.

வாக்கியத்தில் அந்நுவய வியாத்தி யொன்று காட்டப்பட்டது. ஏது அது ஒன்றானும் பயனேதலின். அவற்றுளளும் அந்நுவயஞ் செவ்விதாதலிற், சாட்சி செநநெறியாற் சித்திக்கும் பொருட்டுக் கொடுநெறியாற் சாதித்தல் பொருளாமையின். வியதிரேகவியாத்தியின்மையன்று. ஆதலின் இங்ஙனம் புகையுண்மை அந்நுவயவியதிரேகியே.

கேவலவியதிரேகி.

இங்ஙனம் ஏனையவும். உய்தலுடம்பு சான்மகம், பிராணாதியுடைமையின் யாது சான்மகமன்றது பிராணாதியுடைமையதன்று, எங்ஙனம், குடம்; இவ்வுயதலுடம் பங்ஙனமன்று. ஆதலின் இங்ஙனமன்று. இதின், உயதலுடம்பினது சானமகததுவஞ் சாததியம், பிராணாதியுடைமை ஏது. இது கேவலவியதிரேகி; அந்நுவய வியாதகியினமையின. அங்ஙனமன்றே, யாது பிராணாதியுடையது அது சான்மகம், எங்ஙனம், இதுவென்று திட்டாந்தமில்லை. உய்தலுடம்பெல்லாம் பக்கமே.

இலக்கணமுங் கேவலவியதிரேகியோது. எங்ஙனம்? பிருதிவியிலக்கணங் கந்தமுடைமை. இவ் விடை பதம், பிருதிவி,கந்தமுடைமையின். யாது பிருதிவியன்று அது கந்தமுடையதன்று, எங்ஙனம் புனல். இதில் யாது கந்தமுடை

யது, அது பிரிதிவி, எங்ஙனம், இது என்று தி
ட்டாந்தமில்லை.

பிரமாண இலக்கணமாகிய பிரமாகரணத்து
வும் அவ்வாறே. அங்ஙனமன்றே, காட்சி
முதலியன பிரமாணமென்று வழங்கத்தக்கன.
பிரமாகரணத்துவமாதலின்; யாது பிரமாணமெ
ன்று வழங்கப்படாதது பிரமாகரணமன்று. அ
து எங்ஙனம்? காட்சிப்போலிமுதலியன. இ
தில் யாது பிரமாகரணம் அது பிரமாணமென்று
வழங்கத்தக்கது, எங்ஙனம் இதுவென்று திட்
டாந்தமில்லை. பிரமாணமெல்லாம் பக்கஞ்செ
ய்தலின். இதில் வழக்கம் சாத்தியம்; பிரமா
ணத்துவமன்று; அதற்குப் பிரமாகரணத்துவமா
கிய எதுவினின்றும் வேறின்மையிற் சாத்தியஅ
விசேடக்குற்றம் வருதலினான். ஆதலில் இங்
ஙனம் கேவலவியதிரேகிகள் காணப்பட்டன.

கேவலாந்துவயி.

ஒரோவொரேதுக்கேவலாந்துவயி. எங்ஙனம்
விசேடம் அபிதேயம்; பிரமேயமாதலின்; யாது
பிரமேயம் அஃது அபிதேயம், எங்ஙனம் குட
ம்; இதுவும் அங்ஙனம் ஆதலின் இங்ஙனம். இ
தில் விசேடத்திற் கபிதேயத்துவஞ் சாத்தியம
பிரமேயத்துவம் ஏது. அதுவும் கேவலாந்துவயி
யே. யாதபிதேயமாகாதது பிரமேயமுமாகாது.
எங்ஙனம், இதுவென்று திட்டாந்தமில்லை. எ
வ்விடத்தும் பிரமாணிகப் பொருளே திட்டாந
தம். அதுவும் பிரமேயமும் அபி[illegible]மம்.

அந்துவயவியதிரேகி கேவலாந்துவயிகேவல

வியதிரேகியென்னு மேதுக்களதுநடுவே. எவ்வேது அந்நுவயவியதிரேகி. அதுவும் பஞ்சரூபத்தோடு கூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்கவல்லது. ஒரு ரூபத்தானுங் குறைந்ததாகாது.

அப்பஞ்சரூபங்கள், பக்கத் தருமத்தன்மை சபக்கத்திலுண்மை, விபக்கத்தினீக்கம், அவாதிதவிடையத்தன்மை, பிரதிபக்கமின்மையெனபனவாம். இப்பஞ்சரூபங்கள் புகையுடைமை முதலிய அந்நுவயவியதிரேகியேதுக்களினிருக்கும். புகையுடைமை பக்கமான மலைக்குத் தருமம்; மலையினனிருத்தலின். இங்ஙனஞ் சபக்கத்திலுண்மை. சபக்கமாகிய அட்டின் முதலியவற்றினிருக்குமென்பது பொருள். இங்ஙனம் விபக்கமாகிய மடுவினீக்கம். ஆண்டில்லையென்பது பொருள். இங்ஙனம் புகையுடைமை அவாதிதவிடையம். அங்ஙனமன்றே, புகையுடைமையாகிய ஏதுவுக்கு விடையஞ் சாத்திய தருமம். அது தீயுடைமை யாதானும் வாதிக்கப்படாமை கண்டிக்கப்படாதென்பது பொருள். இங்ஙனம் புகையுடைமை பிரதிபக்கமில்லது. அங்ஙனமன்றே சாத்தியத்தின் விபரீதசாதக ஏதுக்கூறுபாடு பிரதிபக்கமென்று கூறப்படும். அதுவும் புகையுடைமை ஏதுவினின்று தோன்றுமையின். ஆதலின இங்ஙனம் பஞ்சரூபங்கள் புகையுடைமை ெ விருக்கும். ஆதலின் இப்புகையுடைமை ...டைமையது கமகம். அது தீயுடைமை சாதகம். தீயினது பக்கதருமத்துவம் ஏது

வினது பக்கதருமத்துவவலியாற் றதிக்கும்.

அங்ஙனமன்றே, அநுமானத்திற்கு அங்கம் வியாத்தியும் பக்கதருமத்துவமுமென இரண்டு. அவற்றுள் வியாத்தியாற் சாமாநிய சித்தி, பக்கதருமத்துவவலியாற் சாத்தியத்திற்குப் பக்கதருமத்துவவிசேடம் சித்திக்கும். மலைத்தருமமாகிய புகையுடைமையாற்றீயும்மலைச்சம்பந்தமாயேய நுமிக்கப்படும். வேறாயிற் சாமாநியம் வியாத்திகவர்வதானே சித்தித்தலின், அநுமானம்பயனில்லை

அந்நுவயவியதிரேகியேது யாதது பஞ்சரூபத்தோடு கூடியே நல்ல வேதுவாம். வேறாயின் ஏதுப்போலி; ஏது வல்லதென்னுமளவு.

கேவலாந்நுவயி நான்கு ரூபத்தோடு கூடியே தனது சாத்தியத்தைச் சாதிக்கும். அதற்கு விபக்கத்தினீக்கமின்று. விபக்கமின்மையின்.

கேவலவியதிரேகி நான்குரூபத்தோடு கூடியே. அதற்குச் சபக்கத்தினுண்மையின்று. சபக்கமின்மையின்.

பக்கஞ் சபக்கம் விபக்கம் யாவை கூறுதும்.

ஐயமுடைய சாத்திய தருமத்தையுடைய தருமி பக்கம். எங்ஙனம்? துணிந்த புகை அநுமானத்தின் மலை.

துணிந்தசாத்திய தருமத்தையுடைய தருமி சபக்கம். எங்ஙனம? இப்புகையநுமானத்தின்கண்ணே யட்டில்.

வ்பக்கந் துணிந் சாத்தியமில்ல தருமி. எங்ஙனம்? ஆண்டே மடு. ஆதலின் இங்ஙனம் அந்நுவயவியதிரேகி, கேவலாந்நுவயி கேவ

லவியதிரேகியாகிய மூன்றேதுவுங் காட்டப்ப ட்டன.

ஏதுப்போலி.

அவற்றின் வேறுபட்டன ஏதுப்போலிகள். ஏதுவிலக்கண ஏதுவைப்போல விளங்குவன ஏதுப்போலிகள்; அவையும் பலவகைய; அசித்தம், விருத்தம், அனைகாந்திகம், பிரகரணசமம், காலாதீதயயாபதிட்டம், என்னும் வேறுபாட்டால் ஐவகையே.

அசித்தம்.

அவற்றுள்துணியாத பக்கவிருத்திஅஅசித்தம். அது ஆசிரையாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பியத்துவாசித்தமென மூன்றுவகைத்தே.

ஆசிரயாசித்தமெங்ஙனம்? வான்றாமரைமணமுடைத்து; தாமரைத்தன்மையால்; பொய்கைத்தாமரைபோல. இதில் வான்றாமரை ஆசிரையம்; அஃது மின்றே.

சொரூபாசித்தமெங்ஙனம்? சொல்அநித்தம்; சட்புலப்படுதலால், குடம்போல. சட்புலப்படுதல் ஏது. அதுவுஞ் சொற்கின்றே. சொற்செவிப் புலப்படுதலின்.

வியாப்பியத்துவாசித்தம் இருவகை. ஒன்று வியாத்திகவர்வதாகிய பிரமாணமின்மையின் மற்றையது உபாதியுண்மையின். அவற்றின், முதலதெங்ஙன்? யாது சத்து அதுகணிகம், அதெங்ஙனம்? கற்றடலம். சத்தாதியுஞ்சத்து. சோபாதிகத்தாற சத்துக்கு வியாப்பியத்துவாசித்தங்கூறில் வேறடைந்த கணிகத்துவம் வேண்ட

ப்படும். இரண்டாவதியாது? வேள்வியின் நி
கழுங் கொலை அதன்ம சாதநம்; கொலைமையா
ல்;. வேள்விப்புறத்துக் கொலைபோல. இதின்
அதன்மசாதநத்தின்கட் கொலைமை பிரயோச
கமின்று. மற்றென்னை? இழிவே பிரயோசக
ம். உபாதியென்னுமளவு. அங்ஙனமன்றே
சாத்திய வியாபகத்துவமாய்ச் சாதநத்திற கவ்வி
யாபகத்துவமாதல் உபாதியென உபாதியிலக்க
ணம். அதுவும் இழிவின்கணுண்டு. இழிவு
சாத்தியமான அதன்மசாதநத்துவத்துக்கு வியா
பகமே; யாண்டியாண்டதன்மசாதநத்துவம் ஆ
ண்டொருதலையாக இழிவென்று. இங்ஙனஞ்
சாதநமான கொலைமையை இழிவு வியாபியா
து; யாண்டு யாண்டு கொலைமை ஆண்டொரு
தலையா விழிவின்று; வேள்வியினது பசுக்கொ
லையினிழிவின்மையின்; வேறடைந்த வியாத்
தியோடுகூடிய கொலைமை வியாப்பியத்துவாசி
த்தமே.

சாத்தியவிபரீதத்தோடு வியாத்தம், விருத்தம்.
அஃதெங்ஙனம்? சொல் நித்தம்; காரியத்தன்
மையால், வான்போல. காரியத்தன்மை சாத்திய
மான நித்தியத்துவத்துக்கு விபரீதமான அநித்தி
யத்துவதத்தோடு வியாத்தம். யாதுகாரியம் அஃ
தநித்தியம். ஆதலிற் காரியத்தன்மை விருத்தம்.

வியவிசாரததோடு கூடியது அனைகாந்திகம்.
அஃது சாதாரண அனைகாந்திகம் அசாதாரண
அனைகாந்திகமென இருவகைத்து. வற்றுள்
பக்க சபக்க விபக்கததிலிருப்பது சாதாரண அ
னைகாந்திகம். எங்ஙனம்? சொல் நித்தியம்; பிர

மேயத்தன்மையால்; வியோமம்போல. இதிற்பி ரமேயத்தன்மையேது. அஃது நித்தஅநித்தத்தி ருப்பது. சபக்கவிபக்க நீக்கமியாததசாதாரண அநைகாந்திகம். அஃதெங்ஙனம்? நிலம் நித்த ம்; மணமுடைமையால். மணமுடைமை சப க்கமாகிய நித்தத்துவநின்றும் விபக்கமாகிய அநி த்தத்துவநின்றும் நீக்கம்; நிலமாத்திரையினிரு த்தல்.

எவ்வேதுவுக்குச் சாத்தியவிபரீதத்தைச் சாதி க்கும் எதுக்கூறுபாடுண்டதுவே பிரகரணசமம். எங்ஙனம்? சொல் அநித்தம்; நித்தியதருமமின் மையால். சொல் நித்தம்; அநித்தியதருமந் தோ ன்ருமையால், என்பதுவே. இதுவே சற்பிரதி பக்கமென்றுங் கூறப்படும்.

பிரமாணந்தரத்தாற்றுணிந்த சாத்தியவின்மை யேது வாதித விடையம். காலாதீதியயாபதிட் டமெனவுங் கூறப்படும். எங்ஙனம்? தீவெம் மையிலது; பொருண்மையால்; புனல்போல. இதில் பொருண்மையான எதுவுக்குச் சாத்திய ம் வெம்மையின்மை. அதன்மைகாட்சியானே துணியப்பட்டது; பரிசனக்காட்சியால் வெ ம்மைதோன்றலின். ஆதலின் இங்ஙனம் அநுமா நம் உணர்த்தப்பட்டது.

உபமாநம்.

அதிதேசவாக்கியப்பொருணினைவோடு கூடி ய ஆவொப்புமை அடைபிண்ட ஞானம் உபமா நம். எங் னம்? ஆமாவுணராரனும், எங்ஙனம் ஆ அங்ஙனம் ஆமா, என்றொருகாட்டுமகனூற் கேட்டுக் காட்டுட் புக்கு வாக்கியப்பொருணி

னைத்துக்கொண்டு, எப்போது ஆவொப்புமைவி சிட்டபிண்டங் காணுகின்றான், அப்போதவ் வாக்கியப்பொருணினைவோடு கூடிய ஆவொ ப்புமை விசிட்டபிண்ட ஞானம் உபமானம்; உபமிதியைக் குறித்துக் கரணமாதலின். ஆ வொப்புமை விசிட்டபிண்டங் கண்டபின் னர், இது ஆமாமொழிவாக்கியமான பிண்ட மென்னும் நாமநாமிசம்பந்தஞானம் உபமிதி. அதுவே பலம்.

உரை.

ஆத்தவாக்கியம் உரை. ஆத்தன் உள்ளபொரு ளை உபதேசிக்கும் தன் வாக்கியம், அவாய்நிலை, தகுதி, அண்மையுடைய பதங்களினது கூட்ட ம். ஆதலினுனே ஆபுரவிமகன் யானையென்பது வாக்கியமன்று; ஒன்றற்கொன்றவாய்நிலையின் மையின். "தீயால் நனைக்க" என்பது வாக்கியம ன்று; தகுதியின்மையின். தீ நனைத்தல்கட்கொ ன்றற்கொன்றுளதாகிய தகுதியின்றன்றே "தீ யால் என்னுமூன்றுவதால் நனைத்தல்" ஆகியகா ரியத்தைக் குறித்துக் கரணத்தன்மைதீக்குக் கூ ப்படடது. தீ நனைத்தல்கரணமாம்பொருட்டுத் தக்கதன்று. ஆதலிற் காரியகாரண பாவஇலக் கணசம்பந்தத்திற் றீநனைத்தல்கட்குத் தகுதியி ன்மையிற் றீயானனைக்கவென்பது வாக்கியமன் று. இங்ஙனம் ஒவ்வொரு யாமத்தின் ஒருங்கு கூறப்படாத "வெள்ளை—மாவைக்—கொலாக் —குணர்க" என்னும் பதங்கள் வாக்கியமல்ல. ஒன்றற்கொன்றுள்ள தகுதியுளதாயும் ஒன்றற் கொன்றவாய்நிலையுளதாயும் ஒன்றற்கொன்றண்

மையின்மையின். யாவை அவாய்நிலையன. தகு தியன, அண்மையன, அவையே வாக்கியம். எங்ஙனம்? "சியோதிட்டோமத்தாற் றுறக்கம் வேண்டியான்வேட்க" என்பது முதலியன. "ஆற்றங்கரையில் ஐந்து கனிகளிருக்கின்றன" "ஆவைக்குணர்தி" என்பன முதலிய, பதங்கடாமே விரையக் கூறப்பட்டன வாக்கியமாம்.

அற்றுயின், இதிற் பதங்கள் வாக்கிய நிலையன அல்ல. மற்றென்னெனிற் பொருள்கள்; கனி முதலிய ஆதேயங்கட்கே கரை முதலிய ஆதார அவாய் நிலைமையால். ஆராயிற்பொருள்களும் அவாய்நிலையனவல்ல; அவாய்நிலை இச்சைவடிவாற் சேதந தருமமாதலின். அதொக்கும். பொருள்கள் தம்பதங்கள் கேட்பானுக்கொன்றற்கொன்று விடையமான அவாய் நிலையைத் தோற்றுவித்தலின் அவாய்நிலையனவென க் கூறப்படும். அதன்வழியால் அதனைக் கூறும்பதங்களும் அவாய் நிலையனவென உபசரிக் கப்படும். பதங்களே பொருளைக் கூறிக்கொண்டு பொருள் வேறுப்பாட்டுவிடைய அவாய்நிலையைத் தோற்றுவிப்பனவென்னும் உபசாரத்தால் அவாய்நிலையனவென்றுமாம். இங்ஙனம் பொருள்களும் அவாய்நிலையன; ஒன்றற்கொன்று கூட்டத்தகுதியனவுமாம். அதுவழியால் அப்பதங்களுந் தகுதியனவென்றுபசரிக்கப்படும். அண்மை பதங்களுக்கு ஒருவனுனே விரையக்கூறுதல். அதுவுந் தானே பதங்களினுண்டு; பொருள்வழியானன்று. ஆதலின் இப்

பொருளுண்டாயிற்று. பொருள்கூறும்வழியாற் சேட்டபரனுக்குப் பதவேறுபாட்டுவிடைய அவாய்நிலையையாயினும் பொருள் வேறுபாட்டுவிடைய அவாய்நிலையையாயினுந் தோற்றுவிக்கின்ற, விளங்கும் ஒன்றற்கொன்று கூட்டத் தகுதிப்பொருளைக் கூறுகின்ற பதங்களது கூட்டம் வாக்கியம்; பதமும் எழுத்துக்கூட்டம்;* ஈண்டுக்கூட்டம் ஒரு ஞாநவிடையமாதல். இங்ஙனம் அதின் முறையுடைய வாக்கிய எழுத்துக்கட்கு விரையக்கெடுதல் உண்மையின் ஒருங்கே பலவெழுத்தநுபவ முண்டாகாமையின் முதலெழுத்துக்களை அநுபவித்தெழுத்துக்கேட்குங்கால் முதன்முதலெழுத்தநுபவத்தாற் பிறந்த வாசனையோடுகூடிய ஈற்றெழுத்தோடுபொருந்திய பதத்திறகமைந்த பொருட்சங்கேதங்கவர்தலால் அளிக்கப்பட்ட செவிப்புலனால் ஒருங்கே சதசத்தான பலவெழுத்தைஅகப்படுக்கும்பதஉணர்வு தோன்றுந் துணைவலியால் புறத்தபிஞாநம்போலப் புறத்தபிஞாநக்காட்சியில் அதீதமாயுமுன்னரவத்தை தோன்றுமே. அன்றே பின்னர் முதன்முதற் பத நுபவத்தாற் றோன்றிய வாசனையோடு கூடிய பதப்பொருள் ஞாநத்தால் அளிக்கப்பட்ட ஈற்றுப்பதவிடையச் செவிப்புலனாற் பதத்தை அகப்படுக்கும் வாக்கிய ஞாநமுண்டாம். இவ்வாக்கியம் ஆத்தமகனாற் கூறப்பட்டு உரைப்பிரமாணமாம். அதற்குப்

---

* பதம் "எழுத்துக்கூட்டம்" என்றேனும் சிறுபான்மை ஓரெழுத்தே பதமாதலு முளதென்றறிக.

பலம் வாக்கியப்பொருளுணாவு. இவ்வுரைப் பிரமாணவிலக்கணம் உலகினும் வேதத்தினும் பொது. உலகத்தின் இது விசேடம் யாவனுயினும் ஒருவனுரைத்தனுவான. அனைவருமல்ல. ஆதலின் உலகவாக்கியஞ் சிறிதே பிரமாணம. ஆத்தனைக்கருத்தாவாகவுடைய வேதத்திற் பரமாத்தனை சிமகேசனுற் கூறப்பட்ட வாக்கியமெல்லாம் பிரமாணம. எல்லாம ஆத்தவாக்கியமாதலின.

நான்கு பிரமாணமும் வாணிக்கப்பட்டன இவற்றின வேறுன பிரமாணமல்ல, பிரமாண மாயினும் ஈண்டேயடங்குதலின்.

அருத்தாபத்தி.

அற்றுயின் அருத்தாபத்தியும் வேறுபிரமாண மாகவுண்டு. அங்ஙனமன்றே, பரியனுன சாத்தன பகலுண்ணுனென்று கண்டாயினும் கேட்டாயினும் இரவுண்டல் கற்பிக்கப்படும். பகலுண்ணுனது பருமை இரவுண்டலன்றிக் கூடாது. ஆதலின் பருமை வேறென்றுலாகாமை தோற்றுவித்த அருத்தாபத்தியே இரவுண்டலிற் பிரமாணம். காட்சி முதலியவற்றுின் வேறு; இரவுண்டல் காட்சி முதலியவற்றிற்கு விடயமாகாமையின. இங்ஙனமன்று; இரவுண்டல் அநுமான விடையமாதலின். அங்ஙனமன்றே, சாத்தன் இரவிலுண்பன்; பகலுண்ணு யினும் பரியனுதலின். யாவனொருவன் இரவிலுணணுன் அவன் பகலுண்ணுனுயும் பரியனுகான். எங்ஙன்? பகலிரவிலுணணுன் பரியனுகான். இவன் அங்ஙனமல்லன். ஆதலின் அ

ங்ஙனமல்லன் என்னுங் கேவலவியதிரேகி அநு மானத்தால் இரவுண்டன்றேன்றலின் அநுர்தாபத்தி சற்பனையாமென்க.

அபாவம்.

அற்றாயின் அபாவமென்பதும் வேறு பிரமா ணமாயுண்டு. அதுவும் இன்மை கவாதற்பொ ருட்டு வேண்டப்படும். அங்ஙனமன்றே, குட முதலியவற்றின் அநுபலத்தியாற் குடமுதலிய வற்றின் அபாவந் துணியப்படும். அநுபலத்தி உபலத்தியின்மையென்றது. அபாவப் பிரமாண த்தாற் குடமுதலியவற்றின்மை கவரப்படும். இ ங்ஙனமன்று. ஈண்டு குடமுண்டாயின் அப் போது நிலம் போலக் காணப்படுமென்பது மு தலிய தருக்கத்துணையுடைய தோன்றாமையோடு கூடிய காட்சியானே அபாவங் கவரப்படுதலி ன.

அற்றாயின், இந்திரியங்கள் தம்மோடு சம்பந் தப் பொருள் கவர்வன. அங்ஙனமன்றே; இ ந்திரியங்கள், அடைந்து விளக்கும் ஞானகரண மாதலின்; ஆலோகம் போல. இங்ஙனமாயினு ம் கண்செவிகள் அடைந்து விளக்கும் புறவிந் திரியமாதலின்; மெய்முதலிய போல. மெய்மு தலிய அடைந்துவிளக்குதல் உபயவாதிசித்தமே. இந்திரிய அபாவங்கட்குச் சம்பந்தமேயில்லை; சம்பந்தங்கள் சையோக சமவாயமேயன்றோ? அவை, அவற்றிற்கில்லை. விசேட விசேடிய பாவஞ் சம்பந்தமேயன்று. வேறாதல, இருபொ ருட்கணிற்றல், ஒன்றாதல், இன்மையின் சம்பந் தமே; சம்பந்திகளில் வேறாதலும் உபய சம்பந்

திகளில் அடைதலும் ஒன்றுதலும் உடையதன்
றோ? எங்ஙனம்? முரசு குணிற் சையோகம்.
அது முரசு குணில்களின் வேறுதலும் அவற்றை
அடைதலும் ஒன்றுதலுமாம். விசேடவிசேடி
ய பாவம் அங்ஙனமன்று. அங்ஙனமன்றோ,
தண்டபுருடருடைய விசேட விசேடிய பாவ
ம் அவற்றின் வேறன்று; தண்டத்திற்கு விசே
டணத்துவம் வேறுபொருளன்று; மற்றென்னெ
னிற் சொரூபமே. அபாவமும் விசேடணமா
தலின் திரவியம் முதலியவற்றினொன்றான ஒரு
பொருட் பாவத்திற்றோன்றுது. ஆதலின் அபா
வத்திற்குத் தன்னையுடையதென்னும் புத்தியை
த் தோற்றுவிப்பதானசொரூபமே ததுவே விசே
டணத்துவம். அது வேறு பொருளன்று; இங்
ஙனம், வியாபகத்துவகாரணத்துவ முதலியவு மு
டிக்கத்தக்கன. தன்னொடு கூடியதென்னும் பு
த்தியைத் தோற்றுவிப்பதான சொரூபமே திபமு
தலியவற்றிற்கு வியாபகத்துவம்; நூல் முதலிய
வற்றிற்குக் காரணத்துவமுங் காரியத்தாற்றொட
ரப்பட்ட அர்நுவயவியதிரேகி சொரூபமே.
வேறு பொருளன்று. அபாவமும் வியாபகமா
தலின் காரணமுமாதலின். அபாவத்திற் சாமா
நியமுதலியன உளவாகா. இங்ஙனம் விசேட
விசேடிய பாவம் விசேட விசேடிய ரூபத்தினி
ன்று வேறன்று. இரு பொருட்கணிற்பதுமன்
று; விசேடணத்தில் விசேடண பாவமாத்திரமு
ண்மையின் விசேடிய பாவமின்மையின. விசே
டியத்திலும் விசேடிய பாவமாத்திரமுண்மையி
ன், விசேடணபாவமின்மையின். ஒன்றுமன்று;

விசேடணத்தினது பாவமும் விசேடியத்தினது பாவமுமென உம்மைத் தொகையீற்றினின்றபா வமென்னுஞ் சொல் வேறு வேறு புணரும், இவை இரண்டியபடும்.

இங்ஙனமாயின் அப்பிராமாண்யத்திலும் இது கூறலாம், அப்பிரமாணாநீங்காத ஒரு ஞானத்தை விசேடசதால் ஞாந அப்பிரமாண்யங்கள் கூடவே கவரப்படுமென்று. அப்பிராமாண் யமுந் தன்னானே கவரப்படும். இங்ஙனமாயினும் அப்பிரமாண்யம் பிறிதானே பிரமாண் யமும் பிறிதானே கவரப்படும். ஞாநங் கவர் தலின் வேறன்று, பொருளுள்ஞாந மாநதக்காட்சியானே கவரப்படும். பிரமாண்யம் அநுமாநத்தால். அங்ஙனமன்றே; புனன் ஞாநத்திற்குப் பின் புனல் வேண்டியானது செலவிருவகை; பயனுடையதும் பயனில்லதுமென. அவற்றுள் யாது பயனோடு கூடிய தது பயனுடைச்செலவு. அதனால் ஞாநத்திற்கு மெய்மை அநுமிக்கப்படும். பிரயோகமும் விவாதத்தாற்றழுவப்பட்ட புனன் முதல் ஞாநம் பிரமாணம்; பயனுடைச் செலவு தோற்றுவித்தலான். யாது பிரமாணமன்றது பயனுடைச் செலவைத் தோற்றுவியாது. எங்ஙனம்? பிரமாணப்போலி. கேவலவியதிரேகி. இதிற் பயனுடைச் செலவைத் தோற்றுவிப்பதான புனன் முதலிய ஞாநம் யாதது பக்கம். அதனது பிரமாண்யம் சாத்தியம்; மெய்மையென்று பொருள். பிரமாணத் தவமன்று. நினைவால் வியபிசாரம் வருதலி

ன். எது சமர்த்தச் செலவைத் தோற்றுவித்தல்
பயனுடைச் செலவைத் தோற்றுவித்தலென்னு
மளவு இசகேவலவியதிரேகி அநுமானத்தாற்ப
யினறறியா ஞானத்திற்குப் பிரமாண்யத்துணி
கையில் அது சட்டாந்தமாகச் செலவுக்குமுன
னருந் தன் சாத்தியத்தால் அந்துவயவ்யதிரேகி
அநுமானத்தாற் பயினறறிந்த தன் பிரமாண்ய
ம் அநுமிக்கப்படும். ஆதலிற் பிறிதானே பிரமா
ண்யம், ஞானங் கவர்தானே, கவரப்படுவதெ
ன்று. பிரமாணங்கள கூறினோம். பிரமேயங்க
ள் கூறுதும். பிரமாண முற்றம்.

௨. பிரமேயம்.

ஆன்மா, சரீரம், இந்திரியம், அருத்தம், புத்தி,
மநம், பிரவிருத்தி, தோடம், பிரேத்தியபாவம்,
பலம், துக்கம், அபவருக்கம், இவைகளே பிர
மேயம்.

ஆன்மா.

அவற்றுள், ஆன்மத்துவ சாமானியவான் ஆன்
மா. அவனும் தேகேந்திரியங்களின் வேருயினு
ன், சரீரங்கடோறும் பின்னமாயினன்; விபு;
நித்தியன்; அவனுமானதக்காட்சியான். விபாத
த்திற் புத்தியாதி குணவிசமுடையன்; அங்ங
னமன்றே, புத்தியாதிகள் குணங்கள்; அநித்தி
யமாய்க் கொணடோரிந்திரியத்தாற் கவரப்படு
தலால், அருபம்போல; குணமுங குணியைப்
பற்றியதே. அவற்றுள், புத்தியாதிகள் பூதங்க
ட்குக் குணமல்ல; மானதக் காட்சித்தன்மையா
ல். யாவை பூதங்கட்குக் குணங்கள் அவை ம

ந ராற் கவரப்படா. எங்ஙனம்? உருவாதிக
ள திகருக் கால மநங்களுக்குக் குணங்களல்ல;
விசேட குணமாதலில். யாவை சங்கியை மு
தலிய, திககாதி குணங்கள், அவை விசேட கு
ணமல்ல; அவை யெல்லாப் பொருள்கட்கும்
பொதுவே. புத்தியாதிகள் விசேட குணங்க
ள்; குணமாய்கசொண்டோரிந்திரியத்தாற் கவ
ரப்படுதலின். உருவம் போல. ஆதலிற்றிக்கா
திகள குணஙகளல்ல. ஆதலின் இவ்வெண்பொ
ருளினின்றும் வேருய்ப புத்தியாதிகட்குக் கு
ணி வேண்டத் தக்கது அதுவேயான்மா. பிர
யோகமும் புத்தியாதிகள் பிருதிவியாதியெண்
பொருளின் வேருய பொருளைப் பற்றுதது, பி
ருதிவியாதியெண் பொருளைப் பற்ருமல் குணம
ன்று. எஙஙனம? உருவாதி. கேவலவியதி
ரேகி. அந்நுவயவியதிரேகியானும் விளக்குப.
எஙஙனம்? புத்தியாதிகள் பிரிதிவியாதியெண்
பொருளின் வேருன பொருளைப்பற்றுவன; பி
ரிதிவியாதிகளைப பற்ருமற் குணமாதலின். யா
து எதைப்பற்ருமற் குணம், அது அதின் வே
ருயதைப் பற்றுவதாம். எஙஙனம்? பிரிதிவி
யைப் பற்ரு ஒலி பிருதிவிக்கு வேருனவாளை
ப் பற்றியதன்று. ஆதலின், இங்ஙனம், பிரு
திவியாதியெண்பொருளின் வேருயொன்பதா
ம் பொருளான ஆன்மாச் சித்திக்கும். அவ
னும் யாண்டுங காரியந் தோன்றுதலின் விபு.
பரம மகற் பரிமாணவானென்று பொருள். வி
புத்துவத்தால் அவற்கு நித்திய அநுமாநம். வி
யோமம் போல. சுகம் முதலிய வேறுபாட்டா

ல் உடம்புகடோறும் வேறுபாடுடையான். அவனுக்குப் போகநிலம் உடம்பு. இன்பத் துன்பம் அநுபவம்.*

உடம்பு.

போகமது எதனோடுகூடிய ஆன்மாவிற்றோன்றும் அதுபோகநிலம்; அதுவே உடம்பு. உடம்பு சேட்டைக்கிடமாயினும், உடம்புச் சேட்டை இதம் அகிதம் அடைத்த பரிகரித்தற்பொருட்டுப் புடைபெயர்தல். புடைபெயர்தன்மாத்திரை அன்று.

இந்திரியம்.

உடம்போடுசையுத்தமாய ஞாநகரணமான தீந்திரியம் இந்திரியம். "தீந்திரியம் இந்திரியம்" என்று கூறிற் கலாதியினும் இந்தியத்துவம் வரல்வேண்டும். ஆதலில் "ஞாநகரணமான" என்று கூறப்பட்டது. அங்ஙனமாயினும், பொருள் இந்திரியக்கூட்ட முதலியவற்றினும் இந்தியத்துவம் வரல்வேண்டும். ஆதலின் "உடம்போடுசையுத்தமாய" என்று கூறப்பட்டது. "உடம்போடுசையுத்தமாய ஞாநகரணமே" என்று கூறில், ஆலோகசதினும் இந்தியத்துவம் வரல்வேண்டும். ஆதலில் "தீந்திரியம்" என்று கூறப்பட்டது.

அவ்விந்திரியங்களும் ஆறு; ஆக்கிராணம், இரசநம், சட்சு, துவக்கு, சுரோத்திரம், மநம்,

* ஆனபா, அநாதிநிதநியன் அன்று, கடவுளாற் சிருட்டிக்கப்பட்டதாதலின். விபுத்துவமுடையானுமன்று. விபுத்துவ பரிசதியத்தை அநுமிப்பதுங் கூடாது.

என்பனவே. அவற்றுள, கந்த தோன்றுதற்
சாதநஇந்திரியம ஆககிராணம்; மூக்கு நுனியி
ன் இருப்பது. அதுவும் பிருதுவிமயம். கந்த
ம்உடைமையும் கந்தம் கவாவதால். இரசத்தோ
ற்ற சாதநஇந்திரியம் இரசநம்; நாநுனி இருப்
பது. அதுவும் அப்புமயம். ரூபாதி ஐந்தினு
ளிரதசதுககே அபிவியஞ்சகமாதலில்; வாய்நீர்
போல. ரூபத்தோற்ற சாதநஇந்திரியஞ் சட்சு;
கண்மணிநுனியினிருப்பது; அதுவுந் தேயும
யம். ரூபாதி ஐந்தினுள் ரூபததிற்கே யபிவிய
ஞ்சகமாதலில்; விளககுப்போல; பரிசத்தோ
ற்ற சாதநஇந்திரியந் துவக்கு; உடம்பெலாம்
வியாபி; அது வாயுமயம். ரூபாதி ஐந்தினுள்
பரிசததிற்கே யபிவியஞ்சகமாதலின். சிவிறிக்
காற்றுப்போல. சத்தத்தோற்ற சாதநஇந்திரிய
ஞ் சோததிர . அது செவியோடுகூடிய ஆகா
யமே. வேறு பொருளன்று. சத்த குணததுவ
ததால்; அதுவுஞ் சத்தங் கவாதலின். எவ்விந்
திரியம் ரூபாதி ஐந்தினுள் எக்குணத்தைக் கவ
ரவது, அது அக்குணத்தோடு கூடியது. எங்ங
னம்? சட்சு, ரூபங் கவர்வது; ரூபகுணமுடை
யது. சத்தங் கவர்வது சுரோத்திரமாதலின், அ
து சத்தகுணமுடையது. அகவிந்திரியம், மநம்.
இன்பாதி ஞாநங்கள், கரணசாத்தியங்கள்; கிரி
யையாதலின்; துணித்தற் கிரியை போல.

அருத்தம்.

அருத்தங்கள் ஆறு பதார்த்தங்கள்; அவை இ

ரவியம், குணம், கருமம், சமாநியம், விசேடம், சமவாயம் என்பனவே.

பிரமாணம் முதலியன ஈண்டே அடங்குவனவாயினும் பயன்படல் வசத்தால் பேதமாகக் கூறப்படும்.

திரவியம்.

சமவாயிகாரணம் திரவியம்.

அத் திரவியங்களும் பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மநம், ஒன்பதே.

பிரிதிவி.

அவற்றுள் பிரிதிவித்துவ்சாமாநியம் உடையது பிரிதிவி. வன்மை, மென்மை முதலிய அவையவ சையோக விசேடத்தோடு கூடியது; ஆக்கிராணம், இந்திரியம்; உடம்பு, மட்பிண்டம், கல் முதலிய உருவமுடையது. கந்தம், இரதம், ரூபம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேறுதல், கூடல், பிரிதல், அண்மை, சேய்மை, குருத்துவம், நைமித்திகத்ரவத்வம் சம்ஸ்காரமுடையது. அதுவும் நித்த அநித்தபேதத்தால் இருவகை; பரமாணுரூபம் நித்தியம். காரியரூபம், அநித்தியம். பிரிதிவியினுடைய ரூபரசகந்தபரிசங்கள், நித்தியங்கள். பாகத்தாற்றோன்றியனஅநித்தியம்; பாகந் தேயு சையோகமாதலின். பிரிதிவியினது முன்னர்ரூப முதலியன கெடும் மற்றையன பிறக்குமென்பது பாகத்தாற்றோன்றுவன.

அப்புதன்மைச் சாமாநியமோடு கூடிய தப்பு. இரசநம் இந்திரியம். ஆறு, கடல், பனி, ஆலி, முதலிய உருவமுடையது. கந்தமின்றிச் சிநேகமோடுகூடிய முன்சொன்ன குணமுடையது. நித்த அநித்தமுமாம். நித்தம் பரமாணுரூபம். அநித்தங் காரியரூபம்.

தேயு.

தேயுத்தன்மைச்சாதியுடையது தேயு. சட்சு, இந்திரியம்; ஞாயிறு, பொன், தீ முதலிய வேறுபாடுடையது. ரூபம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேறுதல், சையோகம், விபாகம், சேய்மை, அண்மை, நைமித்திகத்தளர்ச்சி, சம்ஸ்காரமுடையது. நித்த அநித்தமும், முன்போல. அது உற்பூதரூப பரிசம், அநுற்பூதரூப பரிசம், அநுற்பூதரூப உற்பூத பரிசம், உற்பூதரூப அநுற்பூதபரிசமென்று நால்வகை.

உற்பூதரூப பரிசம் எங்ஙனம்? பிண்டத்தேயுவான தீமுதலியன போல்வ உற்பூத அபிபூதரூப பரிசம். அநுற்பூதரூபமென்னில் கட்புலப்படாமை வேண்டும். அநுற்பூதபரிசமென்னிற் பரிசத்தாற் கவரப்படாமை வேண்டும். அபிபவம் வலியதாகிய தன் சாதியான பிரிதிவி சம்பந்தப் பரிசத்தாற் பணைப்படுமே. அநுற்பூத ரூபபரிசத்தேயு எங்ஙனம்? சட்சு இந்திரியம். அநுற்பூதரூப உற்பூத பரிசம் எங்ஙனம்? வெந்நீரிற் றேயு. உற்பூதரூப அநுற்பூதபரிசம் எங்ஙனம்? விளக்கினதொளிமண்டலம்.

வாயு.

வாயுத்துவமுடையது வாயு. துவக்கிந்திரியம். பிராணன் காற்று முதலிய பேதமுடையது. பரிசம், சங்கியை, பரிமாணம், வேறுதல், சையோகம், விபாகம், சேயமை, அணமை விரைவுடையது. அதுவும் பரிசததால் அநுமேயம். அநுமனமன்றே, வாயு வீசுகையில வெம்மை தணமையில் பரிசம் யாதொன்று தோன்றுகின்றது அது குணம். ஆதலிற் குணயை விட்டறியப்பட்டதாய்க் குணியை அநுமாபிககும். குணியும் வாயுவே; பிரிதிவி தோன்றுமையின் பிரிதிவி வாயுவல்ல; அதற்கு வெம்மை தண்மையில் பரிசமின்மையின். அதுவும் நிதத அநித்த பேதத்தால் இருவகை நிததியம் பரமாணுரூபவாயு, அநித்தியங் காரியரூபவாயு.

தோற்றமும் அழிவும

அவற்றுட் காரியமான பிரிதிவியாதி நான்கிற்குந் தோற்றக்கேடு முறையே கூறுதும். இர

* பிரிதிவியாதிய திரவியங்களுணரும நித்தியமென று பரமாணுக்களிலே பீடிகையிடுப நயாசிரி [illegible] ன, [illegible] ணிணறிக குடமவிணைபுரு சப்தி, குலாலருமகினம் [illegible] ளும நாயிருத்திய முறைற கணடு, அ [illegible] முறைமை [illegible] சாயாத்தியகடவுளினும ஆவாங்கதாபோலும.

கடவுள், சூரியோர் [illegible], அ[illegible]டிசெய்ய வலலவரேயெனின், பரமாணு நித்தியமு சாதிக்கவேண்டியதில்லை.

உலகின்கணணே எப்பொருள்களும உபகாரக்கருவிகளாய நிகழக்காணடலால், காரியரூபமாகிய பிரிதிவியாதியகறின அமைக்கப்பட்ட உபகாரகாரணசத்தின சத்தி

ளோடு பரமாணுக்களது வினையாற் சையோகமு
ண்டாகையிற்றுவியணுகந் தோன்றும். அத
ற்குப் பரமாணுக்கள் சமவாயிகாரணம். அவ
ற்றது சையோகம் அசமவாயிகாரணம்; அ
திட்டாதி நிமித்தகாரணம். துவியணுகங்கள
து வினையாற் சையோகமுண்டாகையிற் றிரி
யணுகந் தோன்றும். அதற்குத் துவியணுகங்க
ள் சமவாயிகாரணம். ஒழிந்தன முன்போல.
இங்ஙனந் திரியணுகங்களாற்றாலதமம். இங்
ஙன முன்றையால் மகாப் பிரிதிவி, மகா அப்பு,
மகா தேயு, மகா வாயுத் தோன்றும். காரியத்
தையடைந்த ரூபாதிகள் தங்கட்கிடமான சம
வாயிகாரணத்தை அடைந்த ரூபாதிகளாற் றோ
ன்றும்; காரணகுணங்கள் காரிய குணங்களைத்
தோற்றுவிக்குமென்னும் நியாயத்தால். இங்ங
னந் தோன்றிய ரூப முதலியவற்றினுடைய கா
ரியதிரவியமாகிய குடமுதலியவற்றிற்கு அ

காரணமாகிய பரமாணுப்பிரிதிவியாதியவற்றின அ
பாயமின்றுகொள்ளோமெனின் ஆதலின் சங்கற்ப
[illegible] பரமாணு சங்கற்பித்தும் ஒரு கருத்தனை உ
டன்படவேண்டும். அச்சங்கற்பகர்த்தா, சங்கற்பவி
டயாதின முன் உணர்கவேண்டும். ஆதலால் பரமாணு
அநாதிநித்தியம் என்பது யுத்திவிரோதமென்றறிக.
பரமாணுவிடத்துச் சங்கற்பசத்திகள் இல்லை, சர்வசா
மர்த்திய சர்த்தாவே வருவிப்பாரென்னின, பரமாணுவி
ன இல்லாத சங்கற்ப சத்தியை உபாதாநமின்றிச் சமை
த்த சாமர்த்தியம் பரமாணுவையும் எளிதிற் சமைக்கும
ன்றே, அற்றேற் பரமாணு நித்தியமென்று வயிறுளைவ
[illegible].

வையவமான சபாலாதியிற் றள்ளுதலாலுயிருடம். புடைசதலாலுயினும் வினைதோன்றும் அதனால் விபாகம். அதனால் அவையவியைத் தோற்றுவிப்பதான அசமவாயிகாரணமான சையோகத்திற்கு விநாசம்பண்ணப்படும். பின்னர்க்காரியத்திரவியமான அவையவியான குட முதலியவற்றிற்கு நாசம். அசமவாயிகாரணநாசத்தாற் றிரவியநாசங் காட்டப்பட்டது. ஓரிடத்துச் சமவாயிகாரணநாசத்தாற் றிரவியநாசம். எங்ஙனம்? முற்கூறிய பிருதிவியாதிகளுக்குச் சங்காரத்தாற் சங்கரிக்கவேண்டி மகேசனுடைய சங்கரித்தல் வேட்கையால், அணுக்களில் வினை, அதனால் விபாகம், விபாகத்தாற் சையோகநாசம் துவியணுகங் கெடுகையில் ஆசிரயக்கேட்டால் திரியணுகாதி நாசமுறையே. பிருதிவியாதி நாசமெங்ஙனம்? நூற்கேட்டின் ஆடை கெட்டு அதனையடைந்த ரூபாதிகளுக்குத் தத்தம் ஆசிரயக்கேட்டானே கேடு வேறொயின் ஆசிரயமிருக்கையில்லை மாறுபட்ட குணமடைதலாற் கேடு. எங்ஙனம்? பாகத்தாற் குடமுதலியன ரூபாதிநாசமென்க.

பரமாணு உண்மையிற் பிரமாணம் யாது? கூறுதும். சாளரவெயிற்கண்ணதாகிய எல்லாவற்றினு நுண்ணியதியாதொன்றும், அது தன்னுணண்ணியதாகிய பரிமாணத்திரவியத்தாற்றொன்றியது: காரியத்திரவியம் ஆதலிற் குடம்போல. அத்திரவியமுங் காரியமே, பெருந்திரவியத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரியத்துவநியமத்தால் ஆதலின் ஒருங்ஙனே துவியணுகமெ

ன்றும் வேறு திரவியஞ் சிகதம. அதுவுஞ் சம
வாயிகாரணத் திரவ்யாதாற்றோன்றும். காரி
யத்திரவியமாதலிற் குடம்போல. யாது துவிய
ணுகத்தைத் தோற்றுவிப்பததுவே பரமாணு. அ
து வுகதோன்றாதே. அற்றாயின், காரியத்திர
வியத்தைக் தோற்றுவிப்பதற்குக் காரியத்துவநி
யமமாதலின அது தோன்றுதோங்ஙனம் ? கூ
றுதும். [illegible]ணிறந்த காரிய பரம்பரைக்குற்ற
ம வருதலின் [illegible]வணமாயிற், பல திரவியத்
[illegible] விசேடமின்மையின். மேருகடு
[illegible]நடுப்பரிமாண[illegible]துவம் வருதலின்,
[illegible] துவியணுகம
[illegible]தொன்றும். ஒன்
[illegible] நியமமாதலின மூன்
[illegible]லிய [illegible]யிற் பரமாணமின்மையி
[illegible] திரியணுகம் முன்று துவிட்டுகங்களானே
[illegible] ஒன்று [illegible] நியம
[illegible]லின, [illegible] காரியத்தைய
[illegible] மகத்துவ[illegible]மையின. நான்கு
[illegible] பிரமாணமின்மையின.
[illegible] மகத்துவ[illegible]ன்றுதல் கூடுதலின்.

ஆகாயம்

ஆகாயத்துவகுணமுடையது ஆகாயம். சத்
தம், சங்கியை, பரிமாணம், வேறுதல், சையோ
கம், விபாகமுடையது. விபு, நித்தியம், சத்த
லிங்கமுடையது. அதற்குச் சத்தலிங்கம் எங்
ஙனம் பாரிசேடத்தால்; அங்ஙனமன்றே, ச
த்தகுணஞ், சாமானியமுடையதாய் நம்மனோர்
புறவிந்திரியமொன்றாற் [illegible]வரப்படுதலின்; ரூப

மபோல. குணமுங் குணியைப்பற்றியதே. அதற்குப் பிரிதிவியாதி நான்கும்* ஆன்மாவுங் குணியாகா. சத்தஞ் செவியாற் கவரப்படுதலின். யாவை, பிரிதிவியாதி குணங்கள், அவை சுரோத்திரேந்திரியத்தாற் கவர்வ அல்ல? அங்ஙனம், எங்ஙனம்? ரூபாதிகள். சத்தஞ் சுரோத்திரேந்திரியத்தாற் கவரப்படும். திக்குக்காலமநங்களது குணமன்று ; விசேடகுணமாதலின். ஆதலின் எட்டினின்றும் வேறாகச் சத்தத்திற் குணக்குணியநுமிக்கப்படும். அதுவே ஆகாயம். அதுவும் எண் பேதத்திற் பிரமாணமின்மையின். ஒருமையாற்கூடுதலின. ஒருமையாதலின். ஆகாயத்துவமென்னுஞ் சாமாநியம் ஆகாயத்தில்லை ; சாமாநியம் பலவிடத்திருத்தலின். ஆகாயம் விபு ; பரமமகற்பரிமாணமுடையதென்று பொருள். எல்லாவிடத்துங் காரியந் தோன்றுதலின் விபு. விபுத்துவத்தானித்தியம்

* சத்தகுணத்த[illegible] ஆகாய[illegible] திப்பா இயம்[illegible] பூமியின [illegible] [illegible]செறிதி[illegible] வாயுவே [illegible] உபசார[illegible] [illegible]யாரி. சத்தம் உற்பத்தியான இடத்தே [illegible] [illegible]வைபோத வாயுவின் [illegible] அலை [illegible] யால் [illegible] பலிப்ப இயவாறே கேட்பவனது [illegible] [illegible] அயல்வாயுவின் கூறுகள் சலிக்கப்பட அச் சலனமே காரணமாகச் சத்தம் அறியப்படுகின்றது. இத் [illegible]யறியாதார் ஆகாயப்பூ என்பார்போல, ஆகாயமே சத்தத்தினை உபசாரகருவியென்றுரர். வாயுகாரியாதி[illegible] கணனே வாயுவைத் துராதபோது அங்ஙன் அசைக்கப்படும் பணியினின்று சத்தம் பிறவாமை இதற்குச் சான்றாகக் கொள்க.

காலம

காலம் திக்கின் வேறான பரத்துவாபரத்துவ
ததால் அநுமேயம். சங்கியை, பரிமாணம், வே
றுதல, சையோகம், விபாகமுடையது ; ஒன்று;
நித்தியம, விபு, அதற்குத் திக்கின் வேறான ப
ரத்துவாபரத்துவத்தால் அநுமேயத்துவம் எங்ங
னம? கூறுதும். அணிமையும அண்மையால்
பரத்துவத்திற குருகனை முதியோன்கண் வே
றான பரத்துவந் தோன்றும சேயனுச்சேய்
மைய ற பரத்துவத்திறகருகனை இளையோன்க
ண வேறான பரத்துவந் தோன்றும. இதில் தி
க்கினின் வேறான பரத்துவமும் அபரத்துவமும் கா
ரணமாயத திக்கு முதலிய காரணமுண்டாகா
மையின காலமே காரணமென்றநுமிக்கப்படும்.
அது ஒன்றாயினும நிகழ்விறப்பெதிர்வு வினையு
பாதி வசத்தான நிகழ்வு முதலிய வழக்கத்தைய
டையும புருடனைபபோல, அவற்கு அடுத
ன முதலிய வினையுபாதிவசத்தான் மடையன்
முதலியபெயரடையும இதற்கு நித்திய விபு
த்துவங்கள முன்போல.

திக்கு ஒன்று, நித்தியம், விபு, சங்கியை, ப
ரிமாணம, வேறுதல், சையோகம், விபாகமு

[illegible]

டையது அதுவம், கிழக்கு முதலிய [illegible]கக
ளான, அநுமேயம அவற்றிற்கு வேறு [illegible]சதரி
னமையின கிழக்கினும மேற்கினும பொருளா
ணடேயிருத்தலின அது ஒன்று [illegible], சன
தன சையோகவுபாதி [illegible] [illegible] முதலி
ய பெயாகளை அடையும *

[illegible]

ஆனமசதத முடையது அனமா [illegible] முதலிய வேறுபாடடாற பலவே அது [illegible] கூறி [illegible] அக[illegible] கணங்கா சங்கிலை முதலிய [illegible] துயபுசதி முதலிய ஒனபது [illegible] அ[illegible] கு[illegible] [illegible]யதத வி[illegible]தத்துவங்களமுனபோல. அ[illegible] சையோகி

அக[illegible]நகிரியாம மநம [illegible] [illegible] மிய ஞானத த[illegible]க்க காரணம சங்கிப முதலிய எணகு ணமுடையது [illegible]பபுணாசசியாறபு

* [illegible]

[illegible] உரசதவைபபட்ட இடம்சை அபகனா [illegible] அ[illegible] [illegible] திரவியங [illegible] இவவெலலாம திரவிய லக்கணட [illegible], பிரிதுவியாதி திரவி யஙகளி லடஙகினறன ஆதலால திககுத திரவியம அன்றென்று [illegible]
திரவிய [illegible] உணமைய[illegible] [illegible] திறவறல்றக குறி[illegible] [illegible]பபடடவறிக காலம எனறே திர வியம உணமை[illegible]

றுபொருளாகவாவது அசைவேனே எல்லா ஞா
னங்களிறகுஞ் சாதகம் அதுவும காட்சியென்று
மானறனவினின அநுமானத்தாறறேறனறுமது
அங்ஙனமனறு, ...னப முதலிய ஞானங்களை க
டபுலமுதலிய அல்லாககரணத்தாற சாதிப்பனை
டபுலமுதலிய வனறியுந் தோனறலின ஆ
தலின ஓனப முதலிய ஞானங்கள அடையுமி
டத்து யாது காணம அது மனம அது அநுபரி
மாணம திரவியங்கள கூறிறும, குணங்கள
கூறுதும

௩௰

சாமானியமுடையது, சமவாயிகாரணமல்லது, வினைஅல்லது, குணம அதுவும பொருளைப பறறியது ருபம, ரசம, கந்தம, பரிசம, சங்கியை, பரிமாணம, வேறுதல, சையோகம, விபாகம, பரத்துவம, அபரத்துவம, குருத்துவம, திரவத்துவம, சிநேகம, சத்தம, புத்தி, சுகம, துக்கம, விருப்பு, வெறுப்பு, முயறசி, புணணியம, பாவம், வாசனை, எனனும பேதத்தால இருபத்துநான்கு குணமாம

கடபுலனொனறினையாற காணவது ருபம; வி
சேடகுணம பிரதிவி முதலிய மூனறனகண
இருப்பது அதுவும வெணமை முதலிய பல
வேறுபாடு பிரிதிவியிற பாகசருபம தேயு

* பாக சிவப்படைதல, ஆவடைவதோனறுமுறை
பேச்சில 'பயம' எனப்படும

விற பாகசவெண்மையொளி. அப்புவில் ஒளி யில்லாத அபாகசவெண்மை.

இரசம்.

இரசம் இரசனத்தாற் கவரப்படுவது, விசே டகுணம்; பிரிதிவிபுனல்களிலிருப்பது. அவற் றுள் பிரிதிவியின் மதுர முதலிய அறுவகைப் பாகசமும், அப்புவின் மதுரமய பாகசமும் நித தியா நித்தியமாம். நித்தியம்—பரமாணுவான அப்புவில்; அநித்தியம் காரியமான அப்புவில என்க.

கந்தம்.

கந்தம் ஆக்கிராணத்தாற் கவருங் குணம்; பி ரிதிவி மாத்திரையின் இருப்பது. அது நறுநா ற்றந் தீநாற்றமென்றிருவகை. புனல் முதலி யவற்றிற் கந்தந் தோன்றல் சையுக்த சமவாயத தால் என்றறியத்தக்கது.

பரிசம்.

பரிசம் துவக்கிந்திரியத்தாற் கவரப்படுவது, விசேடகுணம். பிரிதிவியாதி நான்கின் மாத திரமிருப்பது; அது தண்மை, வெம்மை, தண் மை வெம்மையில்லது, என்னும் பரிசபேதத்தா ல் மூவகை. தண்மை நீரில்; வெம்மை தீயில்; தண்மை வெம்மையில்லது பிருதிவிவாயுக்களி ல். இவ்வுருவாதிநான்கும் மகத்துவத்தோடொ ருபொருளிற் சமவேதித்துக்கொண்டுறெபூதங்க ளாயே காட்சிகள்

சங்கியை.

சங்கியை ஒருமை முதலிய வழக்கின் காரண ம்; சாமானிய குணம், ஒன்றுமுதற் பரார்த்தமள

வ ப. அவற்றுள் ஒருமை இருவகை; நித்தஅநித்தம்பேதத்தான் நித்தியத்தையடைந்தது நித்தியம். காரியத்தையடைந்த தநித்தியம். தன்னாசிரைய சமவாயிகாரணத்தை அடைந்தவொருமைபாற் றோன்றுவது இருமை அநித்தியமே. அதுவும் இரண்டு பிண்டங்களில ஒவ்வொன்றி லொன்றொன்றெனும் அவாவுதற்கருத்தாற் றோன்றும். அவற்றுட் பிண்டங்கள் சமவாயிகாரணம். பிண்டங்களில் ஒருமைகள் அசமவாயிகாரணம் அவாவுதற்கருத்து நிமித்தகாரணம். அவாவுதற்கருத்து நாசத்தானே இருமை நாசம். இங்ஙனம் மும்மை முதலிய தோற்றம்.

பரிமாணம்.

பரிமாணம் அளவுவழக்கின் காரணம். அது அணு, மகத்து, நெடில், குறில் என நான்குவகை. அதுவும் நித்த அநித்த பேதத்தால் இருவகை. நித்தியத்தை அடைந்தது நித்தியம். காரியத்தையடைந்த தநித்தியம். காரியத்தையடைந்த பரிமாணங் காரணத்தையடைந்த சங்கை யோகம், பரிமாணயோகம், பிரசயயோகம்; அவை யைப்பற்றி மற்று வியணுகபரிமாணம் இறையவாவுதற்கருத்தாற் றோன்றியது. பரமாணு இருமைசங்கையோகம். சங்கை காரணமென்று பொருள். திரியணுகபரிமாணமும் தனதாசிரைய சமவாயிகாரணத்தை அடைந்த பன்மைச்சங்கையோகம். சதுரணுகாதிபரிமாணம் தனதாசிரைய சமவாயிகாரண பரிமாணத்தாற் றோன்றியது. பஞ்சித்திரட்சி பரிமாணம் தனதாசிரைய சமவாயிகாரண அவயவங்களதுப

ன்னுதற் சையோகத்தாற் றோன்றியது. பர மாணுபரிமாணமும ஆகாயாதிகளைய அவை ந்த பாிமாணமென்னும் பரமமகற் பரிமா ண மும் நித்தியமே.

வேற்றல்.

வேறுதல் வேறென்னும் வழக்கின் காரணம.

சையோகம்.

சையோகஞ் சையுக்தவழக்கினேது. இரண் டன் கண்ணது; அவ்வியாப்பிய விருத்தியது. அது வேறுவினையாற்றோன்றியது, இரண்டன் வினையாற்றோன்றியது, சையோகத்தாற்றோன் றியதென மூவகை. அவற்றுள் வேறுவினையா ற்றோன்றுவதெங்ஙனம் வினையுடைய பருந தோடு வினையில் குற்றிக்குச்சையோகம். அத ற்குப் பருந்தின் வினை அசமவாயிகாரணம். இர ண்டன்வினையாற் றோன்றுவதெங்ஙனம்? வி னையுடைய மல்லரது சையோகம். சையோகத் தாற் றோன்றுவதெங்ஙனம்? காரண அகாரண சையோகத்தாற் காரிய அகாரிய சையோகம் எங்ஙனம்? கைத்தருசையோகத்தான் மெய்த்த ருசையோகம்.

விபாகம்.

விபாகம் பிரிவின் வழக்கினது. சையோகமு தற்றுயிரண்டன்கண்ணிருப்பது. அது வேறு வினையாற்றோன்றியது, இரண்டன் வினையா ற்றோன்றியது, விபாகத்தாற்றோன்றியதென மூ வகை. அவற்றுள் முதல தெங்ஙன்? பருந் தின் வினையாற் பருந்தொடுவிபாகம். இரண் டாவதெங்ஙன? தகர்களது விபாகம். மூன்று

வதெங்ஙன கைத்தருவிபாகத்தான் மெய்த்தருவிபாகம்.

பரத்துவ, அபரத்துவம்.

பரத்துவாபரத்துவங்கள, பர அபரவழக்கின் காரணங்கள். அவை இருவகைய; திக்கான வருவுங் காலத்தான்வந்தவும். அவற்றுள் திக்கானவந்தவற்றது தோற்றங் கூறுதும்.

ஒரு திசையிலிருக்கும் பிண்டங்களில், அஃது தன்னின் அணித்தென்னுங் கருத்தால் அளிக்கப்பட்ட திக்குப்பிண்டசையோகத்தால் அபரத்துவம் அணியதனகட்டோன்றும். சேய்மைக் கருத்தாற் பரத்துவஞ் சேயதனகட்டோன்றும். பிண்டத்திலுடைய அண்மை காண்பவனதுடம்பவங்கியார்

காலத்தான்வந்த பரத்துவாபரத்துவங்களது தோற்றங் கூறுதும். நியமமல்லாத திக்கின் இருக்கின்ற இளையோன் மூத்தோனுடைய பிண்டங்களில் இவன் அவனின் அற்பகாலமுடையன் என்னும் இவ்வகை அவாவுதற்கருத்தால் அளிக்கப்பட்ட காலபிண்டங்களினுடையசையோகத்தால் இளையோன்கண் அபரத்துவந்தோன்றும். இவன் அவனின் மிகுந்த காலமுடையன் என்னுங் கருத்தான், மூத்தோன்கட்பரத்துவந்தோன்றும்.

குருத்துவம்.

குருத்துவம் முதல் வீழ்தலின் அசமவாயிகாரணம். பிருதிவி டனல்களினிருப்பது. சையோகம் வேகமுயற்சியின்றிக் குருத்துவத்தால் வீழ்தல் உளதென்று, கூறப்படும்.

திரவத்துவம்.

திரவத்துவம் முதல் ஒழுகுதலின் அசமவாயி காரணம்; நிலநதேயு நீரினிருப்பது. திரவத்துவம் நிலந் தீயான நெய் பொன்களுக்குத் தீசையோகத்தாற் றிரவத்துவமாதலின், நிமித்திகத்திரத்துவம். நீரின் இயற்கைத் திரவத்துவ

சிநேகம்.

சிநேகந் திரட்டுதல். நீரில்மாத்திரமிருப்பது. காரணகுணமுதற்று. குருத்துவமுதலிய போலப் பொருணிற்குந் துணையும் நிற்பது.

சத்தம்.

சத்தஞ் செவிப்புலனுற் கவர்வது; சதியுடையது. ஆகாய விசேடகுணம்.

அற்றாயின், அதற்குச் செவிப்புலனுற் கவரப்படுதல், எங்ஙனம்? யாண்டாயினு முரசு முதலிய இடத்திற் சத்தந் தோன்றும். செவிப்புலன் புருடனிடத்தே இருக்கும். அஃதொக்கும்; முரசிடத்தே தோன்றிய சத்தம் வீசி தரங்க நியாயத்தாற்றான், கதம்பமுகுள நியாயத்தாற்றான், தனக்கணித்தான் சத்தந்தான் தோற்றுவிக்கும். அச்சத்தமுஞ் சத்தத்தாற் தோற்றுவிக்குமென்னு முறைமையாற் செவிப்புலத்திற் றோன்றிய இறுதிச்சத்தஞ் செவிப்புலனுற் கவரப்படும். முதலது நடுவதுமல்ல.

இங்ஙனம் வேய் பிளக்குங்கால் இருபிளவினீக்கத்திற் றோன்றிய சத்தஞ் சத்தாந்தரந் தோற்றுவிக்குமுறையானே செவிப்புலனிறுதிச் சத்தந் தோன்றும். அவ்வீற்றிற் சத்தஞ் செவிப்புலனுற் கவரப்படும்.

முரசொலியென்றுற் கேட்கப்பட்டது, என்னும் புத்தி ஈண்டுமெயக்கமே. முரசொலி தோன்றுகையின் முரசாகாய சையோகம் அசமவாயிகாரணம். முரசுகுணிற் சையோகம் நிமித்தகாரணம். வேய்பிளத்தலாற் றோன்றிய சடசடவொலித்தோற்றத்தின் வேய்பிளவாகாய சையோகம் அசமவாயிகாரணம். இருபிளவினீக்கம் நிமித்தகாரணம். இங்ஙனமுதலொலி சையோகத்தாற் றோன்றியதும் விபாகத்தாற் றோன்றியதுமாம். முதலதொழிந்திடும் ஒலிகள் சத்தத்தை அசமவாயிகாரணமாகவுடையன. அநுகூலவாயு நிமித்தகாரணம். சையோகத்தால் விபாகத்தால் சத்தத்தாற் சத்தந் தோன்றுமென்று பிறருங் கூறினர் முதலது முதலான எல்லாச்சத்தங்களுக்கும் ஆகாயமே சமவாயிகாரணம். வினை புத்திபோல முக்கணவத்தையது. அவற்றுண் முதனடுவொலிகள் காரியசத்தத்தாற் கெடும் ஈற்றது ஈற்றயலால், சுந்தோபசுந்தநியாயத்தாற் கெடுமென்பது பொருந்தாது. முக்கணவவத்தையானவீற்றதுடைய இரண்டாங் கணத்திருப்பதான மூன்றுங்கணத்தில்லையான ஈற்றயலாலீற்றுக்கேடு தோன்றல்பொருந்தாமையின். ஆதலின் ஈற்றுண் ஈற்றயற்கேடு. ஈற்றுக்கேடு சத்தத்தின் கேடு. சத்தம் அநித்தியம். சாமாநியமுடையதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கவரப்படுதலின் குடம்போல. இதில் சத்தத்தினுடைய அநித்தியத்துவஞ் சாத்தியம். அநித்தியத்துவமும் விநாசத்தோடு கூடிய

சொரூபத்துவம் விநாசத்தோடு கூடிய சத்தை பொருந்தாது. சத்தையில்லாத பிராகபாவத்தில் அநித்தியத்துவமின்மை வரல்வேண்டும். சாமாநியமுடையதாய் நம்மனோர் புறவிந்திரியத்தாற் கவரப்படுதல் எது. இந்திரியததாற் கவரப்படுதலென்றுகூறில் ஆன்மாவின் வியபிசாரம் வருதலின் புறவிந்திரியமென்று கூறப்பட்டது. யோகி புறவிந்திரியததாற் கவர்வதான அதனோடு வியபிசாரம் வருதலின் அதைவிலக்கும்பொருட்டு நம்மனோரென்று கூறப்பட்டது. யோகியுண்மையிற் பிரமாணம் யாதுகூறுதும். பரமாணுக்களொருவற்குக் காட்சி ; பிரமேயமாதலின். குடம்போல. யாவன் பரமாணுவைக் காண்பான் அவனே யோகி. அநங்னமாயினுஞ் சாமாதிகளோடு வியபிசாரம்வருதலின் சாமாநியமுடையதாய் என்று கூறப்பட்டது. சாமாநிய முதன்மூன்றும் சாமாநியமுடையவல்ல.

புத்தி.

பொருள் விளக்கம் புத்தி.

சுகம்

பிரீதிசுகம் ; அது எல்லாராலும் அநுகூலமாக அறியத்தக்கது.

துக்கம்.

பீடை துக்கம். அது எல்லாராலும் பிரதிகூலமாக அறியத்தக்கது.

இராகம்.

இராகம் இச்சை.

துவேஷம்.

குரோதந் துவேஷம்.

பிரயத்நம்.

ஊக்கம் பிரயத்நம். புத்தியாதியாலும் மாநதக்காட்சி.

தருமம், அதருமம்

தருமாதருமங்கள் சுகதுக்கங்களுக்கு அசாதாரண காரணங்கள். அவை காட்சியல்ல. அநுமிக்கப்படும். சாத்தனுடம்புமுதலிய சாததன் விசேடகுணத்தாற் றோன்றியன. காரியமாய்ச் சாத்தனுக்குப் போகவேதுவாதலின். அது சாத்தன் முயற்சியாற் பிறந்தபொருட்போலும்.

சமஸகாரம்.

சம்ஸ்காரம, வேகம், பாவனை, திதித்தாபகமென மூவகை.

அவற்றுள், வேகம், பிரிதிவி முதனான்கினும் மநதினுமிருப்பது ; வினைக்கேது.

பாவனையென்னுஞ் சம்ஸ்காரம், ஆன்மாவின்மாத்திரையாயிருப்பது. அநுபவத்தாற் றோன்றியது. நினைவிற்கேது. அதுவும் எழுந்தே நினைவைத் தோற்றுவிக்கும். எழுதல் துணையுண்டாதல். சம்ஸ்காரிக்குத் துணைகள் ஒப்புமைகாண்டன் முதலியன.

திதித்தாபகம் பரிசம்போல விசேடித்திருப்பது. தனக்கிடமாய் வேறொரு வடிவான பாய்முதலியவற்றிற்கு, அந்நிலைமையை அடைவிப்பது. இப்புத்திமுதற்றருமம் ஈறானவையும் பா

வனையும் ஆன்ம விசேடகுணம். குணங்கள் கூறினும். கருமங் கூறுதும்.

கருமம்.

புடைபெயர்ச்சி கருமம். குணங்கள் போலத் திரவியமாத்திரத்திருப்பது. மூர்த்தத்துவ பரியாய,நாமமுடைய விபுவல்லாத பொருளின் பரிமாணத்தோடு கூட ஒருபொருளிற் சமவேதித்திருப்பது. விபாகவழியால் முதலிடத்திற் சையோகநாசத்தில்; பின்னிடத்தின் சையோக வேது. எழுதல், விழுதல், முடக்கல், நீட்டல், நடத்தலென்னுங் கூறுபாட்டால் ஐவகை. சுழறன் முதலியன நடத்தலுள் அடங்கும்.

சாமாநியம.

அனுவிருத்தி ஞாநவேது சாமாநியம். திரவிய முதன் மூன்றினிருப்பது. நிதநியம்; ஏகம்; அநேகாநுகதம். அதுவும் பரமெனவும், அபரமெனவும் இருவகை. அவற்றுட் பரம் சத்தை; பலவிடையமாதலின். அதுவும் அனுவிருத்திமாத்திரமேதுவாதலிற் சாமாநியமாத்திரம். அபரந் திரவியத்துவமுதலிய அற்பவிடையமாதலின். அதுவும் வியாவிருத்திகமேதுவாதலில். சாமாநிய விசேடம் இதில் ஒருவகை கூறினும். பொருளின் வேறான சாமாநியமில்லென்று, இதிற் ச றுதும். ஆயிற் பின்னமாய் வேறுபட்ட இலக்கணமுடைய பிண்டங்களின் ஏகாகார புத்தி எல்லாவற்றினும் அனுடந்த யாதைப்பற்றி நிற்கும் அதுவே சாமாநியமென்க. அற்றாயின் நாமைலை நீக்கத்தாற் பண்

றப்பட்டதே ஏகாகாரபுத்தி. அங்ஙனமன்றோ எல்லாவடிவ்ஞு ானல்ல நீக்சவிடையமே வி ரூபமானவர்த்தத் தன்மையோகியான சாமாந்யவிடையமன்றேயெனின் இங்ஙனமன்று; விதிமுக ஞானே யேகாரங்கவர்தலின்.

விசேடம்.

விசேடம் நித்தியத்திரவியத்திருப்பது. வியாவிருத்தி. புத்திமாத்திரதிற்சேது. நித்தியத்திரவியங்கள் ஆகாயமுதலியவைந்து, பரமாணுரூபமான பிரிதிவியாதி நான்கு.

சமவாயம்.

நீக்கமின்றிருப்பவற்றின் சம்பந்தம் சமவாயம். அது கூறப்பட்டதே. அற்றாயின் அவையவ அவையவி ள் நீக்கமின்றிருப்பன. ஆதலின் அவற்றது சம்பந்தம் யாததுவே சமவாயம். சமவாயமென்பது பொருந்தாது, அவையவத்தி வேறா யவையவியின்மையின். பரமாணுக்களனறோ? அங்ஙனம் பல; குடமிதுகுடமிது என்று கவரப்படும். இதிற் கூறுதும். குடம் பரிமாதென்னுங் காட்சியுண்டு, அது பலவாய்ப் பரியதல்லதாய்ப் புலப்படாததாகிய பரமாணுக்களிலே உண்டாதல் தகாது.

இப்புத்தி மயக்கமெனனில் அன்று; வாதகமினமையின்.

ஆதலினிங்ஙனம் திரவியாதியறுபொருளுங் கூறப்பட்டன. அவை விதிமுகஞானத்தால் அறியப்படுதலிற் பாவரூபங்களே.

அபாவம்.

இப்பொழுது நிடேதமுகப் பிரமாணத்தால் அறிவதாகிய அபாவமான ஏழாம்பொருள் கூறுதும். அவ்வபாவம்; சமுசர்க்காபாவமெனவும், அந்யோந்யாபாவமெனவும் வகையான் இரண்டு.

*சமுசர்க்காபாவம் பிராகபாவமும், பிரத்துவம் சாபாவமும், அத்தியந்தாபாவமுமென மூவகை.

உற்பத்திக்குமுன் காரணங்களிற் காரியமின்மை பிராகபாவம்? எங்ஙனம், நூல்களில் ஆடையில்லை. அஃதநாதி தோற்றமின்மையின். கெடுவதுங் காரியமே, அதன்கேடாதலின்.

தோன்றியகாரியத்திற் காரணங்களின்மை பிரத்துவம்சாபாவம். கெடுதலென்னுமளவு. எங்ஙனம்? குடமுடைகையிலோட்டிற் குடமில்லை. கோலானடித்தன் முதலியவற்றாற் பிறப்பது. அது தோன்றுவதாயினுங் கேடில்லது. கெட்டது மீண்டுந் தோன்றாமையின். முக்காலத்தினுமின்மை அத்தியந்தாபாவம். எங்ஙனம்? வாயுவிலுருவமில்லை., அந்யோந்யாபாவுந் தாதான்மியத்தைப் பிரதியோகியாகவுடைய அபாவம்; குடம் ஆடையன்று. இங்ஙனம் அருத்தங்கள் கூறப்பட்டன.

அற்றாயின் ஞானத்தினும் பிரமத்தினும் வேறானபொருளில்லையெனின், அங்ஙனமன்று. அருத்தங்கள் காட்சியான் மறைக்கப்படாமையின்.

புத்தி.

புத்தி, ஞானம, உணர்வென்பன முதலிய பரி

யாயச் சொற்களால் யாது கூறப்படும், அது
புத்தி. பொருள் விளக்கம் புத்தி. அது அநு
பவமும் நினைவுமென வகையான் இரண்டு.
அநுபவம் மெய்மையும் பொய்மையுமென
இருவகை.

அவற்றுள் மெய்மை யாது? அவிசமவாதமா
ன அக்காட்சி முதலிய பிரமாணங்களாற் றோ
ன்றுவது. எங்ஙனம்? குற்றமில்லாத கட்புல
முதலியவற்றாற் குடமுதலிய ஞானம்; புகையை
இலிங்கமாகவுடையது தீஞானம்; ஆவொப்பு
மைக்காண்டலாலாமாவெனனுஞ் சத்தவாச்சிய
ஞானம். "சோதிட்டோமததாற் றுறக்கம்வேண்
டியான் வெட்க" வென்பது முதலியவாக்கிய
த்தாற் சோதிட்டோமத்திற்குத் துறக்கசாதநத்
துவஞானம்.

பொய்மை அருத்தத்தை நீங்கினது. அப்பி
ரமாணத்தாற் றோன்றுவது. அது சமுசயம், தரு
க்கம், விபரீதமென மூவகை. சமுசயதருக்கங்
கண்பெறக் கூறுதும். விபரீதம் அஃதல்லதின்
கண் கண்கவர்ச்சி; பிரமையென்னுமளவு. எ
ங்ஙனம்? முன்னர்த்தோன்றும் வெள்ளியல்லா
த இப்பியின், இது வெள்ளியென்று வெள்ளி
வருவித்தல்.

நினைவும் மெய்மை பொய்மையென இருவ
கை. மெய்மை நனவில். கனவிலெல்லாஞா
நமு நினைவும் பொய்மை, குற்றவசத்தால்; அ
துவென்புழி யிதுவென்பதுதோன்றலின். எ
ல்லா ஞாநமும் நிராகாரமே. ஞாநத்தில் அரு
த்தத்தாற் றனதாகாரந் தோன்றுமென்பதன்று

சாகாரஞானவாத நிராகரித்தலின். ஆதலினுனே அருத்தாகாரத்தாகாரத்தால் அருத்தாநுமாநமுந் தள்ளப்பட்டது. குடமுதலியன சாட்சியாதலின் எல்லா ஞானமும் அருத்தத்தாற் கூறப்படுவன. அது பொருளோடுகூடிலபமனத்தால் அறியப்படுதலின் நான்குட ஞானவானென்று இவ்வளவுந் தோன்றும்.

மநம்.

ஆகவிந்திரியம் மநம். அதுவுங் கூறினும்.

பிரவிருத்தி.

பிரவிருத்தி தருமாதருமங்கள். பிரவிருத்தி உலகவழக்கின் காரணமாதலின்.

தோடம.

தோடங் காமவெகுளி மயக்கங்கள். காமம் இச்சை. வெகுளி, கோபம் குரோதமென்னுமளவு. மயக்கம் பொய்மையறிவு; விபரீதமென்னுமளவு.

பிரேத்தியபாவம்.

பிரேத்தியபாவம் மீண்டும் பிறத்தல், அது ஆன்மா புதிய உடம்போடுகூடுதல்.

பலம்.

பலம் போகம். சுகதுக்க அநுபவம்.

துக்கம்.

துக்கம் பீடை. அதுவுங் கூறினும்.

அபவர்க்கம்.

வீடு அபவர்க்கம். அதுவும்இருபத்தொருவ

னைத் துக்கமுழுதுங் கெடுதல். இருபத்தொரு வகை, ஆறிந்திரியங்கள், ஆறு விடையம், ஆறு ஞானம், உடம்பு, சுகதுக்கமென்பனவே. இங்ஙனம் கௌணமுக்கியபேதத்தால் சுகந் துக்கத்தோடு கூடவிற்றுக்கமென்று உபசரிக்கப்படும். கூ டம் நீங்காதிருத்தலது. இவ்வுபசாரம், தேன்விடத்தோடு கூடிற்றேனும், விடக்கூற்றில் வைத்தல்போல. அவ்வபவர்க்கமிங்ஙனமுண்டாமெனிற் கூறுதும். நூலாலறியப்பட்ட பதார்த்தசாரூபமுடையனாய் விடையக்குற்றங் காணலாவிரத்தனாய் வீட்டின்ப வேட்கையுடையனாய்த் தியாகபரிபாக வயத்தாற்றோன்றின வான்மாவுடையனாய்க் கிலேசம் நீங்கினவனாய் நிட்காமகருமாநுட்டானத்தால் வருவதான தருமாதருமமீடாதவனாய் விண்ணடைந்த தருமாதருமக்கூட்டத்தை யோகப்பெருமையாலறிந்து ஒருங்குநுகர்வானுக்கு முன்னர்க்கருமநீக்கத்தினிகழ்கின்ற உடம்பு முதலிய நீக்கத்தில் வரும் உடம்பு முதலியவினைமையின் இருபத்தொருதுக்கஞ் சம்பந்தமுண்டாகா. காரணமின்மையின்; இருபத்தொரு துக்கக்கேடுவீடு. அது அபவர்க்கம். இனிச் சமுசயங்கூறுதும்.

௫. சமுசயம்.

சமுசயம் ஒரு தருமியின் மாறுபட்ட பல பொருள் ஞானஞ் சம்சயம். அது மூவகை. ஒன்று விசேடங்காணாதிருக்கையிற சாமானியதரும தரிசனத்தாற் றோன்றியது. எங்ஙனம்? குற்றியோ மகனோவென்று முன்னிற்கும் ஒரு

பொருளின்கண்ணே குற்றிமை துணிவிக்கும்
வளைவு பொந்து முதலியன—மகன்மை துணி
விக்குந் தலை கை முதலியனவென்று விசேட
ங்காணானைய் குற்றிமகற் கொதத்தவுயர்ச்சி வடிவு
காண்பானுமவர்க்குச இவ்வுருக்குற்றியோ மக
னோவென்று சமுசயமுண்டாம். இரண்டாஞ் ச
முசயம் விசேடங்காணாநிருக்கையில் விபாதக்
தாற் றோன்றுவது. அச்சொல் நித்தியமோ அ
நித்தியமோவென ஒருவன் சொல் நித்தமென,
மற்றொருவன் அநித்தமெனில் அவரது விவாத
ததால் விசேடங்காணாது நடுவிருந்த மகற்கு, இ
ச்சொல் நித்தமோ அல்ல தநித்தமோவென்று,
சமுசயமுண்டாம். அசாதாரணதருமமான டண
முடைமையால் விசேடங்காணானுக்கு நிலத,
ன் நித்தியாநித்தியத்துவ சமுசயமுண்டாம அ
ங்ஙனமன்றோ, எல்லாநித்தியத்துணீங்கினமை
முண்டாதலோடு கூடுதல். நிலம் நித்தியமோ
அல்லது நித்தத்து நீங்கினவதனோடுகூடுதலின்
அநித்தியமோவென்று சமுசயம்

ச. பிரயோசனம்.

எதனானேவப்பட்டு மகன் முயலாநின்றான்,
அது பிரயோசனம். அது சுகமடைதல். துக்கக்
கேடு. வாழவிருப்பாற்கு அதின்பொருட்டன்
றோ முயற்சியும்.

ரு. சித்தாந்தம்.

வாதிபிரதிவாதிகட்குடம்பாட்டு விடையமா
ன அருத்தஞ் சித்தாந்தம். அது இருவகை.
ன்று, ஒத்தகருமிதிட்டாந்தம். எங்ஙனம்?

றகையுடைமையேதுவிற்கட்டில். இரண்டாவ
து வைதருமியதிட்டாந்தம். எங்ஙனம்? அவ்
வேதுவிற்கேமடு.

௬. சித்தாந்தம்.

பிரமாணிக்கத்தன்மையாலுடம்படுமருத்தஞ்
சித்தாந்தம். அது சர்வதந்திரம், பிரதிதந்திரம்,
அதிகரணம், உடம்பாடென நால்வகை.

அவற்றுள் சர்வதந்திர சித்தாந்தமெங்ஙனம்?
தருமிபூத்திரவுண்மை.

இரண்டாவதெங்ஙனம்? நையாயிகர்க்கு ம
னமிந்திரியம். அதுவுஞ் சமானதந்திரமானவை
சேடிகத்தில் சித்தம்.

மூன்றாவதெங்ஙனம்? நிலமுதலானவற்றின்
கருத்தாச்சித்திகையில் அவனுக்குச் சர்வஞ்ஞ
த்துவம்.

நான்காவதெங்ஙனம்? சைமினியினுடைய
நித்தியாநித்திய விசாரமெப்படியாயினுமாகச் ச
த்தங் குணமென்பது.

௭. அவயவம்.

அநுமானவாக்கியத்தினுடைய ஏகதேசங்கள்
அவயவங்கள். அவை பிரதிஞ்ஞை முதலாயி
னவை. அங்ஙன நியாயசூத்திரமும்; பிரதிஞ்
ஞையேதுவுதாரண உபநயநிகமநங்களவய
வங்கள். அவற்றுட சாத்தியதரும விசிட்டத
ருமிப்பிரதிபாதகவசநம், பிரதிஞ்ஞை, எங்ங
னம்? மலைதீயுடைத்தென்பது.

பஞ்சமியந்தமான லிங்கப்பிரதிபாதகவசந
ம் ஏது. எங்ஙனம்? புகையுண்மையினென்பது.

வியாத்தியோடு கூடின திட்டாந்தவசநம் உதாரணம். எங்ஙனம்? எதேது புகையுடைத்து அது தீயுடைத்து; எங்ஙனம்? அட்டில். பக்கத்தில் இலிங்கத்திலுறுசங்காரம் உபநயநம். எங்ஙனம்? இதுவும் புகையுடையதென்பது. பக்கத்திற் சாத்தியத்திலுறுசங்காரநிகமநம். எங்ஙனம்? ஆகையாற் றீயுடையதென்பது. இப்பிரதிஞ்ஞை முதலைந்தும் அவையவம்போல. அவையவங்கள் சமவாயிகாரணமல்ல. சத்தமாகாயத்திற் சமவேதித்திருக்கையால்.

௮. தருக்கம்.

அநிட்டப்பிரசங்கம் தருக்கம். சித்தமானவியாசதியையுடைய தருமங்களுள் வியாப்பியவங்கிகாரத்தால் வியாபகத்தின் வரவு. எங்ஙனம்? ஈண்டுகடமுண்டாயின் அப்போது நிலம்போலக் காணப்படும் என்பது. இத்தருக்கம் பிரமாணத்தை அழிப்பது. அங்ஙனமன்றே இம்மலை தீயுடையதோ இல்லதோவென்னுமையத்தின் பின் ஒருவன் றீயில்லதென்று கருதிப் போந்தவனைக்குறித்துத் தீயில்லாதாயினதனுற் புகையில்லதுமாகவேண்டுமென்று புகையில்லாமையின் வரவுபண்ணப்படும். அதுவே தருக்கம். அநிட்டபிரசங்கமென்றுஞ் சொல்லப்படும். இது அநுமானவிடைய சோதகம்; தீயில்லாமையைத் தள்ளுதலால். ஆதலில் அநுமானத்தைஅழிப்பது. தருக்கஞ் சமுசயத்திலடங்குமென்று ஒருவன் சொல்வான். அது பொருந்தாது; ஒருசார்வையுடைய விடையத்தையுடையதாகையால்.

௯. நிண்ணயம்.

அவதாரணம் நிண்ணயம். அது பிரமாணபலம்.

௰. வாதம்.

தத்துவமறியவேண்டுவோன் கதை வாதம் அது எட்டுநிக்கிரகங்கட்கதிகரணம்; நூனம் அதிகம், அபசித்தாந்தம், எதுப்போலியின் பஞ்சகமும் அட்டநிக்கிரகங்கள்.

௰௧. சற்பம்.

உபயசாதநமுடையதாய் வெல்லவேண்டுமென்னுமிச்சையுடையான் கதை சற்பம். அது எல்லாநிக்கிரகத்தினுங் கிடைத்ததிற்கதிகரணம். பரபட்சம் தூஷிக்கப்படுகையிற் சுபட்சசாதநப் பிரயோகமுடிவாயுள்ளது சற்பம்.

௰௨. விதண்டை.

சுபட்சதாபனவீனமாய்ப் பரபட்சதூஷணமாத்திரமுடிவாயுள்ள கதை விதண்டை. இவ்வைதண்டிகனுக்குப் பட்சமில்லை. சொல்வார் பலன்ரயுடையதாய்ப் பூர்வோத்தரபட்சத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியக்கோவைகதை.

௰௩. எத்துவாபாசம்.

சொல்லப்பட்ட பக்கத்தருமதாதுவமுதலான ரூபங்களுளொரு ரூபத்தாற் குறைந்தாலும் எதுவல்ல.

சிலரூபயோகத்தாலேதுவைப்போலத் தோன்றுவன எதுப்போலிகள், அவை அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரணசமம், காலாத்தியாபதிட்டமென்னும் பேதத்தாலைவகை. அவற்றுள்.

வியாப்தமான ஹேதுவினுடைய பக்ஷதரும
தையின் ஞானஞ் சித்தம் அதனுடைய அபாவம
அசித்தமென்று அசித்தலக்ஷணத்திற் சொல்ல
பபட்டது. அதுவும் விருத்தமுதலானவற்றினு
முண்டென்று சாங்கரியந் தோன்றுகின்றதாயி
னு மெப்படி சாங்கரியமின்றுமப்படிச் சொ
லலப்படும். ஏதெச்சாதனத்தில முன்னே தோ
ன்றும் தோஷம் ஞானத்தில் சமர்த்தமாயதுவே
தோடத்தைப்பண்ணும். தூடணமெனனுமள
வு, வேறல்ல. முன்னே தோன்றினதனுலே
தோஷமறிவிக்கப்படுகையிற் கதை முடிவாயி
ன. அனனியத்துக்குப் போகமின்மையின்.

எதில் விரோதாதோட ஞானத்தைப்பண்ணு
மது விருத்தஹேதுப்போலி. எதில், வியபிசாரா
திகளால் அப்படியாகும். அது அனைகாந்திகமு
தலாயினவை. அவைகள் வியாததி பக்ஷ தரும
த்துவத்தோடு கூடின ஏதுச்சொரூப ஞானமி
ல்லாமையால்

அசித்தங்கள் தோடஞானத்தைப்பண்ணுமெ
ன்பது. அசித்தம், ஆச்சிரையாசித்தம், சொரூ
பாசித்தம், வியாப்பியத்துவாசித்தமென மூன
றுவகை.

எவ்வேதுவுக்கு மாச்சிரையமறியப்படாதது ஆ
ச்சிரையாசித்தம். எங்ஙனம் ககனாரவிந்த மண
முடையது. அரவிந்தத்தன்மையால்; மடுவிற்று
மரைபோல. கடம் நித்தியம்; காரியத்துவத்தா
ல். படம்போல என்பது, மாச்சிரையாசித்தம்.

எவ்வேதுவாசிரயத்திலறியப்படாதது அது
சொரூபாசித்தம். எங்ஙனம்? சாமானியம் நித

சமயம், காரியத்துவத்தாலெனபது. காரியாது
வவேதுவாசிவையமான   சாமாநியத்தில்லை.
பாசரசித்தமுஞ் சொரூபாசித்தமே. எங்ஙன
ம்? பிருதுவி முதலான நானகு பரமாணுவும்
அநித்தியம், கநதமுடைமையாலென்பது. கநத
முடைமை பசசமாகுமெல்லாவற்றினுமில்லை
பிருதுவிமாதநிரத்திருத்தலின். ஒருகூறறிலே
சொருபாசித்தம்.

அப்படியே விசேடணாசித்தம், விசேடியாசி
த்தம், அசமர்த்தவிசேடணாசித்தம், அசமர்த்தவி
சேடியாசித்தம் முதலானவை சொரூபாசித்த
பேதங்கள்.

அவற்றுள் விசேடணாசித்தமெங்ஙனம்? சத்
தம் நித்தியம் திரவியமாய்ப் பரிசமில்லாமையு
டைமையின். இங்கே திரவியத்துவவிசிட்ட ப
ரிசமிலலாமையுடைமையேது. பரிசமில்லா
மைமாததிரமன்று. சத்தத்திற்றிரவியத்துவமுமி
ல்லை; குணமாதலால. ஆதலால் விசேடண
சித்தம்; திரவியத்துவமென்னும் விசேடணமில்
லாமையால், அதனோடுகூடிய பரிசமில்லாமை
யுமில்லை. விசேடணத்தனின்மையால் விசி
ட்டமில்லாமையால. எங்ஙனம்? தண்டமா
நதன்மையின்மையிற் றண்டவிசிட்டமில்லை.

விசேடியாசித்தமெங்ஙனம்? சத்தம் நித்திய
ம். பரிசமின்மையாய்த் திரவியத்துவத்தையு
டைமையால். ஈண்டும் விசிட்டமேது; விசே
டியமில்லாமையால் விசிட்டமில்லை.

அசமர்த்த விசேடணாசித்தமெங்ஙனம்? சத்
தம், நித்தியம்; குணத்துவமுடையதாய்க் கார

ணுபாவத்தையுடைமையால். இங்கே விசேட ணத்துக்குச் சிறிதுஞ் சாமர்த்தியமில்லை. விசே டியமான காரணுபாவத்துக்கே நித்தியத்துவத் தைச் சாதிக்க வலியுடைமையால். ஆதலால் அ சமர்த்தவிசேடணம் சொரூபாசித்தமென்பது வி சேடணுபாவத்தால் விசிட்டமின்மையால். அ ற்றாயின், விசேடணமானகுணத்துவம் சத்தத்தி லிருக்கின்றதே—எப்படி விசேடணமில்லை? அஃதொக்கும்; குணத்துவமுண்மையே. அது விசேடணமன்று. அதுவே எதுவுக்கு விசே டணமாம். எதன்னியத்தைத் தள்ளுதலென்னு ம் பயனுடையது. குணத்துவம் பயனுடைத் தன்று; அசமர்த்தமென்றுசொல்லப்பட்டதே.

அசமர்த்த விசேடியாசித்தமெப்படி? இதி லே முன்பினனை பிரயோகம். அகாரணத்து வமுடையதாய்க் குணத்துவமுடைமையால் எ ன்பது. இங்கே விசேடணமாத்திரமே நித்திய த்துவத்தைச் சாதித்தலின். விசேடியம் அசமர்த் தசொரூபாசித்தமென்பது, விசேடியாபாவத்தா ல் விசிட்டமின்மையால். விசிட்டமேதுவாய்க் கொண்டமையால் ஒழிந்தது முன்போல.

எங்கே வியாத்தி அறியப்படாதது வியாப்பி யத்துவாசித்தம். அஃதிருவகை. ஒன்று சாத்திய த்துடனே உடனிகழ்ச்சியதில்லாதது. மற்றொ ன்று சோபாதிக சம்பந்தமுடையது.

அவற்றுள் முதலதெங்ஙனம். யாது சத்து அது கணிகம். எங்ஙனம்? சலதரபடலம். சத்தாதியு ஞ்சத்து. இங்கே சத்தாதிபக்கம்; கணிகத்துவஞ் சாத்தியம். சத்துவமேது. இவ்வேதுவுக்குக் கணி

ச்துவத்தோடு வியாத்தியிற் பிரமாணமில்லே.
இரண்டாவதெங்ஙனம்? அவன் கரியன். மைத்திரிமகன்மையால்; காணப்பட்ட மைத்திரி தலயர்கூட்டம்போல. இங்கே மைத்திரிமகன்மையாற் கருமைசாதிக்கப்படும். மைத்திரிமகன்மையிற் கருமை பிரயோசகமன்று. மற்றென்னெனிற் சாகாதியாகார பரிணதியே பிரயோசகம். பிரயோசகமுபாதியென்றுகூறப்படும். தீக்குப் புகைச்சம்பந்தத்தில் ஈரவிறகின் சையோகம். யாகத்துட்பட்ட கொலேமை அதன்மசாதநம்; கொலேமையால், யாகப்புறத்துக் கொலேமைபோல. ஈண்டுங் கொலேமை உபாதியென. உபாதியுண்மையாற் கெலேமையேது, வியாப்பியதநுவாசித்தம். அற்றுயின் சாதநா வியாபகமாய்ச் சாத்தியவியாபகமாவது உபாதியென்றுபாதியிலக்கணம். அது நிடேத்திலில்லே. அஃதெங்ஙனம்? உபாதி இங்ஙனமன்று. நிடேதத்திலக்கணமுண்மையால். அங்ஙனமன்றே சாத்தியாசாத்தியமான அதன்மசாதநத்துவத்துக்கு வியாபகம் நிடேதத்துவம். எங்கேயெங்கே யதன்மசாதநத்துவமங்கேயங்கே நிடேதத்தினிருப்புண்மையால்; எங்கேயெங்கே கொலேமை அங்கேயங்கே நிடேதத்துவமில்லே; யாகத்திற்கங்கமாலேயில் வியபிசாரத்திருல் யாகவங்கமான கொலேயில கொலேமையுண்டு. நிடேதக்துவமில்லேயென்று.

சாத்தியத்தின் மாறுபாட்டோடு வியாத்தமான ஏதுவிருத்தம். எங்ஙனம்? சத்தநித்தியம், காரியத்துவத்தால் என்பது. இங்கே நித்தியத்துவம் சா

த்தியம், அதனுடைய மாறுபாட்டான அநித்திய
த்வேவியாபகம். ஹேதுகாரியம், அஃதநித்தியமே.

வியபிசாரத்தோடு கூடின ஹேது, அநைகாந்
திகம். அஃது இருவகை. சாதாரணம், அசாதார
ணமென. அவற்றுண் முதலாவது பக்ஷசபக்ஷ
விபக்ஷவிருத்தி; எங்ஙனம்? சத்தநித்தியம; பி
ரமேயத்துவத்தாலென்பது. பிரமேயத்துவ ஹே
து, சபக்கமான நித்தியத்திலும் விபக்கமான அ
நித்தியத்திலுமிருக்கின்றது. எல்லாம் பிரமேய
மாதலால். இரண்டாவது சபக்ஷவிபக்ஷங்களி
னில்லாதது, எங்ஙனம்? நிலம் நித்தியம் கந்த
முடைமையால் இங்கே கந்தமுடைமையேது;
சபக்கமான நித்தியவியோமாதியினின்றும், விப
க்ஷமான அநித்திய சலாதியினின்றும் நீங்கினது.

காதமுடைமைக்குப் பிரிதிவி மாத்திரத்திரு
ப்புண்மையால், உண்டாகிய சபக்ஷவிபக்ஷ
முடையஹேதுவுக்குச் சபக்கத்திலிருந்து விபக்
கத்தினீக்கமே நியமமாய்ச், சமகத்தன்மையிலு
ணந்த நியமாபாவமே வியபிசாரம். அது இரு
வகையாற்கூடும். சபக்கவிபக்கத்திலில்லாமையா
லும் அவற்றினிருத்தலாலும்.

ஹேதுக்குப் பிரதிபக்ஷமான வேறொருஹேது பி
ரகரணசமம். சற்பிரதிபக்ஷமென்றுஞ் சொல்
லப்படும். எங்ஙனம்? சத்தம் நித்தம். அநித்திய
தருமந் தோன்றாமையால். இங்கே விபரீதார்த்த
த்தைச் சாதியாநின்ற சமானபலமாகிய ஹேதுமா
கம் பிரதிபக்ஷமென்று சொல்லப்படும். அது த
துல்லியபலமன்று. அது பிரதிபக்ஷமன்று.

அங்ஙனமன்றே, விபரீதத்துக்குச் சாதகமா

ஷவநுமாநம், உபசீவியம், உபசீவகம், அநு பயம் என மூன்றுவகையாம். அவற்றுண் மு தலது வலிமையையுடையது. இரண்டாவது வ லியில்லாதது. எங்ஙனம்? பரமாணுக்கள அ நிசதியம். மூர்த்தமாகையால; கடம்போல. பிரம ணத்தாற் கவரப்படாத தருமியான ப மாணுக்களின நித்தியசத்துவாநுமாநங் கூடா து. ஆசிரையாசித்தியால். இதனாற் பரமாணு சாதகசத்துக்குப பிரமாணியம பண்ணகப்பட்ட து.. அன்றியதற்குத் தோற்றமேயிலலாமையால். ஆதலால் உபசீவியம் வாதகமே. உபசீவியம் தூற்பலமானதால். வாதநியம எங்ஙனம்? இந் தவநித்தியத்துவாநும மே. மூன்றாவது சற்பி ரதிபட்சம்துலலியபலத்தால்.

ஏதுக்குப் பிரத்தியட்சாதி பிரமாண காற்பக்க த்திற் சாத்தியாபாவ பரிச்சின்னம். அது காலாத் தியாபதிட்டம. பாதிதவிடையமென்றுஞ் செ ல்லபபடும் எங்ஙனம? தீ வெம்மையில்லது. பதார்த்தக்கிருதத்தால; சலம்போல. இங்கே ப தார்த்தத்துவம் ஏது. அதுக்குச் சாத்தியம வெம் மை யில்லது. அதனுடைய அபாவம் காட்சி யானே பரிச்சின்னம். துவக்கேந்திரியத்தாற் றீயினதுவெம்மையில்லாமை தள்ளப்படுகையா ல். இன்னுங் காலாத்தியாபதிட்டம் எங்ஙன ம்? கணிகத்துவஞ் சாதிக்கின்றபோது சொன் ன சத்துவவேது. எங்கே கணிகத்துவஞ் சாத்தி யம் அதனுடைய பாவம பிறத்தபிஞாநம். பிரத் தியட்சத்தினாற் பரிச்சின்ன மென்றால் முன் னமறியப்பட்டது. அதுவே இக்கடமென்று பூ

ருவ அநுபவத்தாற் சநித்தவாசனையோடு கூடி யவிந்திரியத்தாற் பிறந்து பூருவாபரகாலத்தைய டைந்த புறத்தபிஞாநத்தால் கடத்துக்கு நிலை மை துணியப்படும்.

இந்த அசித்தமுதலான பஞ்சவேதுப்போலி யும் பக்கதருமத்துவ முதலான ரூபகீநத்துவத் தாலேதுவல்லன. தம்சாத்தியத்தைச் சாதியாத னவிலக்கணமாகுங் கேவலவியதிரேகியினுடை ய அதிவியாத்தி அவ்வியாத்தியசம்பவங்களுமி வற்றடங்கும். இவ்வைந்தினுய்வேறல்ல.

அதிவியாத்தியுடையது வியாப்பியத்துவாசி த்தம். விபக்கத்தினீக்கமில்லாமையால். சே பாதிகத்துவத்தாலும். எங்ஙனம்? கோவிலக்க ணம் என்றும் பசுத்துவத்துக்கு அலதாடி முத லானவுண்மையிற் பிரயோசகம.

அவ்வியாத்திக்குப் பாகாசித்தம். எங்ஙனம்? கோவிலக்கணமென்னுஞ் சித்திரமன்னமான அலைதாடி. அசம்பவம் சொரூபாசித்தம். கோ விலக்கணமான ஒரு குழம்புடைமை.

௰௯. சலம்.

தாற்பரியம் வேறுபடச் சொல்லுஞ் சொல் லுக்குப் பொருள் வேறு கற்பித்துத் தூடணஞ் சொல்லுதல், சலம். எங்ஙனம்? முதற் தாற்ப ரியத்தாற் சொல்லப்பட்ட நவகம்பளமுடை யாணிம்மைந்தனென்னும் வாக்கியத்திற்கு வே றுபொருளாய்ச் சங்கித்தொருவன், இவனுக்கு நவகம்பளங்களில்லை.—வறுமையால் இவனுக் கு இரண்டாயினுமில்லை —எங்ஙனமொன்ப

தென்று தூடியாநின்றான். இவ்வாதி சலவாதி
யாதலாற்றோற்றவன்.

௫௫. சாதி.

அசத்தான உத்தரஞ் சாதி. உற்கருஷ முதலா
ன பேதத்தாற் பலவகைபெருகுமென்னும் பய
த்தால் எல்லாஞ் சொல்லப்பட்டனவல்ல. அவ
ற்றுள் வியாத்திமான திட்டாந்ததருமத்தாற் சாதி
க்கும்போது அவ்வியாபகத்தருமத்தை வருவித்
தலுற்கருஷமென்னுஞ்சாதி. எங்ஙனம்? சத்தம்
அநித்தியம், காரியத்துவத்தால் கடம்போலவெ
ன்று சொல்லுதற்கண் ஒருவனிங்ஙனஞ் சொல்
லாநின்றான் காரியத்துவவேதுவாற் கடம்போ
லச் சத்தமநித்தியமாயின் அந்தவேதுவாலே அ
துபோலவே சத்தமுஞ் சாவயவமாகவேண்டுஞ்சா
த்தியவியாத்தமான திட்டாந்தமான தருமத்தால்
என.

அவ்வியாபகமான தருமத்தின தபாவத்தை
வருவித்தல் அபகருஷமென்னுஞ் சாதி. எங்
ஙனம் முன்சொன்ன அநுமானத்தில் ஒருவன்
இங்ஙனஞ் சொல்லாநின்றான், காரியத்துவ
வேதுவாற் கடம்போலச் சத்தம் அநித்தியமாயி
ன், அந்தவேதுவிற் கடம்போலச் சத்தமுஞ் செ
வியாற் கவரப்படாததாகவேண்டும், கடஞ்செ
வியிற் கவர்வதன்றேயென.

௫௬. நிக்கிரகத்தானம்.

தோல்வியேது நிக்கிரகத்தானம். அது நூநம்,
அதிகம், அபசித்தாந்தம் அர்த்தாந்தரம், அப்பி

ரதிபை, மதாநுஞ்ஞை, விரோதம் முதலானவே
த்தத்தாற் பலவிதமாயினும் பெருகுமென்று சொ
ல்லப்பட்டனவல்ல. சொல்லவேண்டியபொ
ருளிற் சிறந்து குறைதல் நூநம். சொல்லவேண்
டிய பொருளினதிகம் அதிகம். அபசித்தாந்தத்தி
ன் கேடு அபசித்தாந்தம். பிரகிருதத்தில் சம்ப
ந்தமான பொருளுடைய சொல் அர்த்தாந்தரம்.
உத்தரத்தினது தோன்றாமை அப்பிரதிபை. த
க்குப் பிரதிகூலமாயப் பரனுக்குச் சம்மதமா
னவர்த்தத்தைத்தானே அங்கீகரித்தல் மதாநு
ஞை. இட்டார்த்தபங்கம் விருத்தம். எண்ணப்
படவேண்டாமையாகிய ரூபபேதங்களுக்கு
லக்கணங்கூறாமை குற்றமன்று.

தருக்கம் முற்றும்.